# என்னுரை

இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு மித்திரன் பத்திரிகையில் வெளியாகிப் பிரபலமடைந்த இந்நாவல், இலட்சக்கணக்கான வாசகர்களைக் கவர்ந்தது. பலர் நேரிலும் கடித மூலமாகவும் பராட்டுத் தெரிவித்திருந்தனர்.

இருபத்து நான்கு காதற் கடிதங்கள் மூலம் சமூகத்திற்குத் தேவையான ஒழுக்கக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். காதல் என்றால் ஒரு பெண்ணும் ஓர் ஆணும் அன்பு கொண்டு பின் திருமணம் செய்வதென்ற நிலையை விட்டு நீங்கி அவர்கள் சமூகப்பொறுப்புடன் நெறி முறை தவறாது கடிதங்கள் எழுதியுள்ளனர். அதே வேளை காதலர்க்குரிய கட்டுப்பாடுகளையும் மீறி வர்ணனைகளில் ஈடுபட்டுள்ளனர். வர்ணனைகள் இல்லாத எந்தக் காவியமும் சுவைக்காது. பிரபலமான காப்பியங்களை எடுத்துக் கொண்டால் அவை அளவுக்கதிகமாகப் பெண்களை வர்ணிப்பதில் அக்கறை காட்டியுள்ளன. உதாரணமாகச் சங்ககாலத்தில் எழுந்த திருக்குறள் என்ற அறநூல் காதலியை அளவுக்கதிகமாக வர்ணித்துள்ளது. அப்படியானதொரு பரவசமான வர்ணனை இது வரை எந்நூலிலும் எழுதப்படவில்லை.

காதல் என்று ஒன்றில்லை. காமம்தான் காதலாக உருவெடுக்கிறது என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். அதை இன்றைய கல்வியாளர்களும் ஏற்றுள்ளனர். அதே கருத்தைத் திருக்குறளும் சொல்கிறது. வள்ளுவர் காமத்துப்பால் என்றே

குறிப்பிட்டுள்ளார். அன்பு, நேயம், பற்று, அழகு என்பதெல்லாம் காதலிக்கும் போது மட்டுமே உணரப்படுகின்றன. அதன்பின் அவை யாவும் தேவைகளாக மாறிவிடுகின்றன. காதல் இல்லாத உலகம் இல்லை. அன்பை மட்டும் குறிக்கோளாகக் கொண்ட காதலே காவியங்களானது மித்திரன் பத்திரிகையில் வெளியாகி மிகவும் பிரபலமடைந்த இந்நாவலை உங்களின் விமர்சனத்திற்குச் சமர்ப்பிக்கிறேன்.

அன்புடன்,

கே.வி.குணசேகரம்.

# அணிந்துரை

'மனதில் உலவும் நிலவு' என்ற காதல் கடிதங்களால் ஆன நாவலின் தலைப்பே பிரமாதமானது. தலைப்பிற்கேற்ப யாழினி, கரனின் மனதில் உலவுவது உண்மையானது. தலைப்பை ஒவ்வொரு அங்கமும் உறுதி செய்கிறது.

காதல் கடிதங்களாக நாவல் இருப்பதாலும், காதலை மையப்படுத்தி னாலும் சமூகப் பொறுப்புடன் இருவரும் நடந்து கொள்வதும் பாராட்டத்தக்கது மட்டுமல்ல புதுமையானதும்கூட. சமூகத்தில் நடைபெறும் சம்பவங்கள் பலவும் கடிதவாக்கியங்களாக இருப்பதோடு அவை படிப்பினையை ஊட்டுவதாகவும் அமைந்துள்ளன.

காதல் கடிதங்களை எழுதுவதைவிடப் பிறர் எழுதிய காதற் கடிதங்களை வாசிப்பது சுவையானது, இன்பமானது. சமூகப்பிரச்சினைகளைக் காதலர்கள் இருவரும் உணர்ந்துள்ள போதும் கடிதங்களை எழுதும் போது இனிமை குறையவில்லை. திரும்பத் திரும்ப வாசிக்க வேண்டுமென்ற உணர்வை வர்ணணைகளை தூண்டுகின்றன. அதனால் அடுத்த பத்திரிகை எப்போது வரும் என்ற ஆவல் தினமும் எழுந்து கொண்டே இருக்கும். கடினமான இந்து தத்துவங்களைச் சிறு சிறு கூறுகளாகப் பிரித்து அதை விளக்குவதில் கைதேர்ந்தவர் என அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆசிரியர் காதலையும்விட்டு வைக்கவில்லை. அவரது காதலை மையப்படுத்தி வெளிவந்த போர்க்களம், கண்களுக்குச் சொந்தமில்லை, திருக்குறள், இன்பத்துப்பால் கதைகள் என்பன காதலின் எல்லையைத் தொட்டுத் தாண்டியுள்ளபோதும் வரம்பை மீறவில்லை. பழந்தமிழ் நூல்களில் காதலைப் பற்றி மிகவும் சுவையாக நூலாசிரியர்கள் எழுதிய போதும் அவை கவிதைகளாக இருப்பதால் கற்றறிந்த அறிஞர்களே அதன் சுவையை அனுபவித்தனர். இக்காதல் கடிதங்கள் மிகவும் இலகுவான மொழியில் எழுதப்பட்டதால் எழுதவாசிக்கத் தெரிந்த அனைவரும் ரசித்துச் சுவைத்து வாசித்து இன்பமடைய முடிகிறது. இன்னும் இப்படியான பல நூல்களை எழுதக் கடவுள் அவரை ஆசீர்வதிக்க வேண்டும்.

க.பத்மநாதன்

மித்திரன் வாசகர்.

# மனதில் உலவும் நிலவு

# 1

யாழினி, ஜனனி கொடுத்துவிட்டுச் சென்ற கடிதத்தைக் கையில் எடுத்தாள். மனம் சில கணங்கள் தடுமாறியபோதும் உள்ளிருக்கும் வைராக்கியம் அக்கடிதத்தைப் பிரித்துப் படிக்கவிடவில்லை. ‘‘பாவமடி அவன் எந்நாளும் என்பின்னால் சுற்றிச்சுற்றி வந்து கெஞ்சியதால் இக்கடிதத்தை வாங்கி வந்தனான்… வாசிப்பதும் வாசிக்காமல் விடுவதும் உன்னைப் பொறுத்தது. காதலைப் பற்றி நீ கொண்ட தவறான அபிப்பிராயத்தால் தான் அவனை வெறுக்கிறாய். உண்மையில் கரன் நல்லவனடி..’’ யாழினி கலகலவெனப் பெரிதாகச் சிரித்தாள். ‘‘சிபார்சோ..’’

‘‘சிபார்சில்லை. பலநாட்களாக கெஞ்சிமன்றாடியதற்காக எனது கௌரவத்தை விட்டுக்கொடுத்துவிட்டுத் தான் அவன் தந்த கடிதத்தை வாங்கி வந்தனான். இனி உன்ரை விருப்பம். கரன் இரண்டு வருடங்களாக உன்னைச் சுற்றிச்சுற்றி வருகிறான். நீ அவனை மதிக்காததாலை இப்ப என்னைச் சுத்திறான்… ஆரும்தப்பாய்க் கணிச்சிடுவினை என்று தான் கடிதத்தை வாங்கி வந்தனான். உனக்கு விருப்பம் இல்லாவிட்டால் வாசிக்க வேண்டாம்’’

ஜனனி கூறிவிட்டுச் சென்ற வார்த்தைகள் யாழினியின் காதுகளில் ஒலித்தன. யாழினியின் மனஇறுக்கம் சற்றுத் தளர்வது போல் அவளுக்குத் தெரிந்தது. வெகுநேரத்தின் பின் ஜனனி கொடுத்துவிட்டுச் சென்ற கடித உறையைப் பிரித்து உள்ளே இருந்த கடிதத்தை எடுத்தாள். அச்சுப் போன்ற முத்துமுத்தான எழுத்துக்களைப் பார்க்கப் பரவசத்தைக் கொடுத்தது. அவளையும் மீறி கண்கள் கடிதத்தை நோக்கிச் சென்றன.

**அன்பான யாழினி,**

வழி தெருவெல்லாம் உன்வரவுக்காக என்விழிகள் ஆவலோடு தினமும் காத்துக் கிடக்கும் தன்மை உனக்குப் புரியாதல்ல. இரண்டு வருடங்களாக உனது சம்மதத்திற்காக காத்திருக்கிறேன். காலம் பூராவும் காத்திருக்க என்னால் முடியும்.

மலைப்பிரதேசத்து குளிரோடையாக சலசலத்து ஓடிக்கொண்டிருந்த என்மனதுள் தீச்சுவாலையாக நீ புகுந்த எந்நேரமும் என் உணர்வுகளை முறுக்கேற்றி, சூடாக்கிக் கொண்டிருக்கிறாய். உனது அனுக்கிரகப் பார்வை கிடைத்தால் தான் பழையபடியும் மலைப்பிரதேசத்துக் குளிரோடையாக என்மனம் மாறும். இல்லாவிட்டால் பாலைவனத்து ஏரி போல் காய்ந்து பிளவடைந்து கருகிவிடும்.

என்மனத்துக்குள்ளே மல்லிகையாக இருந்து நறுமணம் வீசி உணர்வுகளுக்கு தீனியாக இருக்கிறாயே. அது உனக்குப் புரியுமா..? யாழினி என்று உனக்கு வைத்த பெயர் எவ்வளவு பொருத்தமானது. யாழின் இனிமையான நாதம் உன் வார்த்தைகளில் ஒலிக்கின்றது. உனது பெயரை நினைத்தாலே என் உணர்வுகள் பரவசமடைகின்றன. கண்களை மூடினால் உன்உருவம் இமைக்குள் புகுந்து நர்த்தனம் புரிகிறது. கண்களைத் திறந்தால் எங்கே நீ மறைந்து விடுவாயோ என்ற பயம். மீறிக் கண்களைத் திறந்தாலும் மனதுக்குள் புகுந்து இனிக்கிறாய். என்நினைவில் நீ இல்லாத நேரமே இல்லை. பாதுகாப்பு அரண்களில் வழிமறிக்கும் போது கூட எனக்கு கடவுளின் நினைவு வருவதில்லை. உனது நினைவு தான் வருகிறது. பார்க்கும் பொருளில் எல்லாம் உன்உருவமே எனக்குத் தெரிகிறது. உன்அழகான கண்களை நினைக்கின்ற போது அவை காட்டுகின்ற நளின பாவங்கள் என்னைத் தடுமாற வைக்கின்றன.

சிரிக்கும் போது உன்கண்களில் தோன்றும் பொலிவு, கோபப்படும் போது ஏற்படும் மிரட்சி இவற்றையெல்லாம் எப்படி வர்ணிப்பது?

உருவகிக்க முடியாத அழகே என்னை உருமாற்றாது சம்மதம் சொல்லிவிடு. இல்லாவிட்டால் கல்லறைதான் உன்னுடன் கதை பேசும்.

**உன்னுள் கலந்த, கரன்.**

கடிதத்தை வாசித்துவிட்டு அவனைக் கண்டதும் துடிப்புடன் விரைவது போல் அவளால் அசட்டை செய்ய முடியவில்லை. தனது நண்பியான ஜனனியைத் தேடிச் சென்றாள்; ‘‘நீ வருவாய் என்று எனக்குத் தெரியும்’’ சிரித்தாள் ஜனனி. கலகலப்பாகச் சற்று திமிராகப் பேசும் யாழினி ஜனனியின் கேலியான சிரிப்பைக் கவனிக்காதது போலச் சொன்னாள்,

‘‘எனக்குத் தொந்தரவு தருபவர்களைப் பிடிக்காது. ஒருவழியில் நீயும் எனக்கு தொந்தரவு தான்…’’ யாழினியின் தடிப்பான வார்த்தைகள் ஒருகணம் ஜனனியை உஷ்ணப்படவைத்தன; ‘‘சரி…இனிமேல் உன்னோடு கதைக்க விருப்பேல்ல. உன்னோடு கதைப்பதால் தான் எனக்கு இந்த நிலை ஏற்பட்டது’’ என்றாள் ஜனனி.

‘‘எதைப்பற்றியும் நான் கவலைப்படமாட்டேன். இந்தக் கடிதத்தை அவனிட்டைக்கொடு’’ யாழினி நீட்டிய கடிதத்தை ஜனனி உடனடியாக வாங்கவில்லை. கணங்கள் கரைந்தன. ஜனனியின் செயல் யாழினிக்கு எரிச்சலைக் கொடுத்தது. ‘‘ஏன் அவன் தந்த கடிதத்தை வாங்கி வந்து என்னட்டை தந்த அதை மாதிரி இதையும் கொண்டுபோய்க் கொடு…’’

“கரனின் கரைச்சல் தாங்கமுடியாததால் தான் கடிதத்தை வாங்கி வந்தனான். பதிலை நீ கொண்டு போய்க்குடு..” என்றாள் ஜனனி. யாழினி அவளின் பதிலை எதிர்பார்க்கவில்லை. நீட்டிய கடிதத்தை அவளின் முகத்திற்கு நேரே வீசிவிட்டு நகர்ந்தாள். யாழினியின் செயல் ஜனனிக்கு அளவுக்கு மீறிய கோபத்தைக் கொடுத்தது. எனினும் அவளால் எதுவும் செய்ய முடீயவில்லை. நிலத்தில் கிடந்து காற்றுக்கு உருண்ட என்வலப்பை எடுத்தாள். அவளின் மனம் மிகவும் சோர்வடைந்தது. திமிர்பிடித்த இவளையே கதியென்று நினைத்துக் கலங்கும் கரன் மீது அளவுக்கதிகமான கோபம் ஏற்பட்டது. கடிதம் கொடுக்கும் போது கண்டபடி ஏசவேண்டும் எனநினைத்துக் கொண்டாள்.

# 2

கரன் கடற்கரையில் உட்கார்ந்திருந்தான். மாலை நேரத்துக் குளிர்காற்று யாழினியின் மெல்லிய நீண்டவிரல்கள் உடல் முழுவதும் ஸ்பரிசிப்பது போல் வீசிக்கொண்டிருந்தது. அவனுடைய நினைவுகள் யாவும் யாழினியின் மீதே லயித்திருந்தன. யாழினிக்கு ஜனனியிடம் கடிதத்தைக் கொடுத்துவிட்டுக் கடற்கரையில் பதிலிற்காகக் காத்திருப்பேன் என்று கூறியிருந்தான். கடந்த இரண்டு நாட்களாக கடற்கரையில் அவன் ஜனனியின் வரவிற்காகக் காத்திருக்கிறான். மேற்கு வானில் ஆதவன் கடலினுள் மூழ்கிக் கொண்டிருந்தான்.

இரண்டு வருடங்களாக யாழினியின் புன்னகைக்காகக் காத்திருக்கும் அவனால் அந்த இரண்டு நாட்களும் பொறுமையாக இருக்க முடியவில்லை. அவளது பொலிவான வட்டமுகம் நெஞ்சில் தோன்றிச்சிரித்தது. அழகான நெற்றியில் பதித்திருக்கும் இரட்டைப்பொட்டுக்கள் மின்னி அவனைக்கிறங்கச் செய்தன. படங்களைப் பார்த்து தற்போதைய பெண்கள் மேலும் கீழுமாக இரண்டு பொட்டு வைக்கிறார்கள். யாழினியும் வைத்திருக்கிறாள். அந்தப் பொட்டை வருடம் பூராபார்த்துக் கொண்டிருக்கலாம் என்று நினைத்தான்.

‘கரன்’ ஜனனி அழைத்தாள்.

நினைவுகளிலிருந்து சிரமப்பட்டு விடுபட்ட கரன் எதிரில் நிற்கும் ஜனனியைப் பார்த்தான். அவளது கைகளில் ஒரு என்வலப் இருந்தது.

“இந்தாருங்கோ.. இனிமேல் எந்தப்பிரச்சினையாலும் என்னோட கதைக்க வேண்டாம். பாவத்திற்கிரங்கி உங்கள் கடிதத்தைக் கொண்டு போய் நான்பட்ட கரச்சல் காணும். அவள் ஒரு பெண்ணல்ல பே.. இராட்சகி..பண்பே இல்லாதவள்..அவளைப்போய் காதலிக்கிறீர்களே.. வேறை பொம்பிள்ளையள் உங்களுக்குக் கிடைக்கவில்லையா?”

எதிரே கண்ணகியாக நிற்கும் ஜனனியின் முகத்தைச் சோகத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான் கரன். ஜனனி தொடர்ந்து ஆவேசத்துடன் பேசிக்கொண்டிருந்தாள். “ஒரு ஆண் ஒரு பெண்ணைக் காதலிக்கிறது இயற்கைதானே. விருப்பமில்லாவிட்டால் மரியாதையாகக் கூறலாம் தானே..

திமிரான கதை என்னத்திற்கு. உங்களுக்கு வெட்கம் ரோசம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் எனக்கிருக்கென்பதை யாழினி உணரேல்லை''

''யாழினி தவறாக நடந்துகொண்டதற்காக நான் உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறேன். அவள் எனக்குச் செருப்பால அடிச்சாலும் பூவால் அர்ச்சிப்பதைப் போல் இருக்கும்.''

''உன்னை மாதிரி மடையன் இந்த உலகில் யார் இருக்கிறான்?'' என்று நினைத்த ஜனனி ''உங்களுக்கு அவள் தேவதையாக இருக்கலாம். ஆனால் மற்றவையை அவள் மதிப்பதில்லை. அவளோடு பழகும் எவரும் அவளைப் பெண்ணன்றே சொல்லமாட்டார்கள். பெண்களுக்குரிய இலக்கணம் ஒன்றுகூட அவளிடம் இல்லை…''

ஜனனியின் வார்த்தைகள் கரனுக்கு அளவுக்கு மீறிய சினத்தைக்கொடுத்தன. ''ஓர் உதவியாகத் தான் நான் கேட்டனான். என் மனதுள் தேவதையாக வீற்றிருக்கும் யாழினியைப் பற்றி கேவலமாகக் கதைக்கிற உன்னோட கதைப்பதே தப்பு. கடிதத்தை தந்திட்டு நீ போ.. இதற்கு மேல் கதைத்தால் நான் மனிதனாக இருக்கமாட்டன்''

ஜனனி சிரித்தாள். ''பைத்தியம் முத்திப்போச்சுது. அவளிட்டை அடிவாங்கினால் தான் திருந்துவாய். இந்தா கடிதம். நீ எக்கேடு கெட்டுப்போனாலும் எனக்கென்ன. யாழினீன்ரை விசர் அளவுக்கதிகமாய் உன்னைப் பிடிச்சிட்டுது. உன்னைத் திருத்தேலாது… ஆனால் ஒரு நாளைக்கு நீ செய்த தவறை உணருவாய். உனக்கிருக்கிற பணத்திற்கும், உத்தியோகத்திற்கும் ஆயிரம் பெட்டைகள் வரிசையாய் நிப்பினை..ஆனால் நீ தன்னடக்கமில்லாத பிசாசைக் கட்டுகிறனெண்டு நிக்கிறாய். இண்டைக்கில்லாவிட்டாலும் என்டைக்கோ ஒரு நாள் நான் சொன்னதைப் பற்றிச் சிந்திப்பாய்…நான் வாறன்'' என்று கூறிவிட்டு அவனது பதிலிற்கு காத்திராமல் புறப்பட்டாள் ஜனனி.

கரன் ஆவலுடன் கடிதத்தைப் பிரித்தான்.

''விசர் பிடித்து அலையும் கரனுக்கு!

சுமார் இரண்டு வருடகாலமாக விசர் பிடித்த நாய் போல் என் பின்னால் ஏன் அலைகிறாய். உன்னைக்கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. பலகாலமாக நான் செல்லுமிடமெல்லாம் பின்தொடர்கிறாயே, உனக்கு வெட்கமாய் இல்லை. நீ பின்னால் வருவது எனக்கு அருவருப்பாய் உள்ளது. உன்மீது எனக்கு விருப்பம் இல்லை என்று உனக்குத் தெரியும். தெரிந்த பின்பும் என்னை ஏன் சுத்துகிறாய். அரசாங்க வீதிகளில் செல்ல உனக்கு உரிமையுண்டு. ஆனால் எனக்குக் கடிதம் எழுதி ஒரு பெண்ணிடம் கொடுத்தனுப்ப எவ்வளவு துணிவு வேண்டும். நீ கொடுத்தால் அவள் எப்படி வாங்கிவந்து எனக்குத் தருவாள். இனிமேல் இப்படி நடந்தால் என்னசெய்வேன் என்று எனக்குத் தெரியாது.

காதலில் எனக்கு நம்பிக்கையில்லை. ஒரு பெண்ணைப் பெண்ணென்று நினைக்காமல் தேவதை, கடவுள், அம்மன் என்று வர்ணிப்பதெல்லாம் ஏமாற்றுக்காரரின் மாயவித்தை. அதில்

மயங்கி என்னைப்பலியிட நான் ஒன்றும் முட்டாள் இல்லை. உலகில் காதல் என்று புனிதமான ஒன்று இருப்பதாக எனக்குத் தெரியாது. காதல் என்ற பெயரில் காமம் தான் உள்ளது. உனது காமவெறியை காதல் என்கிறாயா..? எமது நாட்டில் காதலிப்போரை பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். பெண்களை காதல் என்று சொல்லி ஏமாற்றி உணர்வுகளைத் தூண்டிவிட்டு பொன்னும் பொருளும் கேட்கின்ற சமூகத்தைச் சேர்ந்த ஆண்களில் ஒருவன் நீ. உனது உணர்வுகள் காதலால் தீச்சுவாலையாக எரியவில்லை. காமத்தால் தான் அக்கினியாக எரிகிறது. அதை காதல் என்ற போர்வையில் திணிக்கப் பார்க்கிறாய். மற்றைய பெண்களைவிட கூடுதலாக என்னிடம் என்ன இருக்கிறது. என்னைவிட அழகான கவர்ச்சியான பெண்கள் எத்தனையோ பேர் இந்தக் கிராமத்தில் வாழ்கிறார்கள். அவர்களிடம் ஏற்படாத காதல் என்னிடம் ஏன் ஏற்பட்டது. நான் ஏழை. பெற்றோர் இல்லாதவள். சுலபமாக ஏமாற்றி விடலாம் என்ற நினைப்பா? நீ ஊரில் பெரிய பணக்காரனின் மகன். பெரிய உத்தியோகத்தில் இருக்கிறாய். உனக்கேற்ற பணக்காரியை தேடிக்கொள். உனது பெற்றோர் உனது வீட்டுவேலைக்காரியாகக்கூட என்னைச் சேர்க்க மாட்டார்கள். எனவே தயவு செய்து உனது மனதை மாற்ற முயற்சி செய். தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதே. காதல் என்பது காம உணர்வுகளின் வடிகால் என்பதே எனது எண்ணம். இனிமேலும் என்னைப் பின் தொடராதே. கடிதம் எழுத முயற்சிக்காதே.

**இப்படிக்கு உனது எதிரி,**

**யாழினி.**

# 3

**அன்பான யாழினி,**

நான் எழுதிய கடிதம் உனக்கு கிடைத்திருக்குமென நம்புகிறேன். கடிதத்தை எழுதிவிட்டு யாரிடமும் கொடுத்து அனுப்ப முடியாததால் தபாலில் அனுப்பியிருந்தேன். நீயும் எனக்கு தபாலில் அனுப்பியிருக்கலாம். இக்கடிதம் கிடைத்த பின்பாவது அனுப்புவாயென எதிர்பார்க்கிறேன். நீ எனக்கு ஒரு வழியில் சொந்தக்காரி. காதலில் உனக்கு நம்பிக்கையில்லாவிட்டால் முறைப்படி பெண்கெட்டு என் பெற்றோரை அனுப்பட்டா? ஆனால் அதில் ஒரு பிரச்சினை இருக்கிறது. எனது தகப்பனார் சாஸ்திரத்தில் நம்பிக்கை உள்ளவர். தற்செயலாக சாதகம் பிழைத்தால் கடைசிவரையும் உன்னைத் திருமணம் செய்யவிடமாட்டார். என்னுடைய விருப்பத்திற்கு மாறாக எனது பெற்றோர் நடக்கமாட்டார்கள். காதல் அதுவும் இரண்டு வருடங்களாக நாம் காதலிக்கின்றோம் என்று தெரிந்தால் சோதிடம் பாராமல் செய்யச் சம்மதிப்பார்கள். ஆனால் பேசிச் செய்யும் திருமணம் என்றால் கட்டாயம் குறிப்பைப் பார்க்க வேண்டும் என்று சொல்வார்கள். பொதுவாக காதலிப்பவர்களுக்கு எண்களும் சாதகமும் பொருந்தும் என்றும் அந்தப் பொருத்தத்தால் தான் காதல் உண்டாகின்றது என்றும் எனது

நண்பர்கள் கூறுகிறார்கள். அதன்படி ஊரில் காதலித்துத் திருமணம் செய்த எத்தினையோ பேரினது எண்பொருத்தத்தைப் பற்றியும் சாதகப்பொருத்தத்தைப் பற்றியும் கூறி உற்சாகமூட்டுகிறார்கள். ஆனால் எனக்குப் பயமாக இருக்கிறது. நான் நான்காம் திகதி பிறந்தேன். நீர் ஏழாம் திகதி பிறந்தீர். எனவே இருவருக்கும் எண்சோதிடத்தில் பொருத்தம் உள்ளது. ஆனால் இருவரினதும் குறிப்புக்கள் பொருந்துமோ என ஐயப்படுகிறேன். அப்பா ஜோதிடத்தில் அளவுக்கதிகமாக நம்பிக்கை வைத்திருப்பவர். சிறிய பிரச்சினையானாலும் ஒத்துக்கொள்ள மாட்டார். எனவே தயவு செய்து சம்மதம் தெரிவியும்.

வெள்ளிக்கிழமை பிள்ளையார் கோயிலிற்கு வந்திருந்தாய் மண்ணிறப் பாவாடை முழங்காலுக்கு கீழ் ஒரு அடி வரை நீண்டிருந்தது. அதற்கேற்றாற் போல மண்ணிறச் சட்டையின் முன்புறத்தில் மண்ணிற நூலால் அழகாக தையல் வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இவ்வளவு நாளும் நீ உடுத்திய உடைகளை விட அன்றுடுத்திய மண்ணிற உடை என்னை தீராத மயக்கத்துக்குள்ளாக்கியது. அந்த உடையில் நீ தேவதையாகத் தோன்றினாய். அந்த உடையில் பார்க்கும் போது ஆறேழு வயது குறைந்து விட்டதைப்போல் இருந்தது. திட்டமிட்டு அழகு செய்யப்பட்ட தலை முடிசுருண்டு கவர்ச்சியைக் கொடுத்தது. உண்மையில் அன்று தான் உனது முழுமையான அழகை நான் தரிசிக்க நேர்ந்தது. என் நண்பன் ஒருவனிடம் எனது காதலின் வேகத்தைப் பற்றிக் கூறினேன். அவன் எனக்காக இரக்கப்பட்டான். உன்னோடு கதைக்க விரும்பினான். நான் விடவில்லை. நீ ஜனனியை ஏசியது போல் கண்டபடி அவனையும் ஏசிவிடுவாயென பயந்தேன். அவன் சொன்னான் சில பெண்களுக்கு காதலிப்பது பிடிப்பதில்லையாம். நீயும் அப்படி இருப்பாய் என்று சொன்னான். காதலை வெறுப்பவர்கள் நாளடைவில் மனம் மாறவும் கூடும். எனவே தொடர்ந்து முயற்சி செய் என்றான். அவன் சொன்னது நடக்கக்கூடாது என்று நான் எல்லாக் கடவுள்களையும் வணங்குகிறேன். அப்படிப் பயங்கரமாக அவன் என்ன சொன்னான் தெரியுமா..? அதை என்னால் எழுதவே முடியவில்லை. அப்படியானால் எப்படித் தாங்கிக் கொள்வேன் என்று நினைக்கிறாய். ஆனால் அவன் அப்படிச் சொன்ன பின்பு அப்படியும் இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அப்படி இருக்கக் கூடாதென்று நினைத்துக் கொண்டு தான் அவன் சொன்னதை எழுதுகிறேன். இவ்வளவு தீவிரமாக நீ நேசித்தும் உன்னை அவள் வெறுப்பதற்கு காரணம் அவள் இன்னொருவன் மீது கொண்ட காதலாகவும் இருக்கும் என்றான். அதன் பின்பு தான் அந்த யோசனை வந்தது. உண்மையில் நீ என்னை விரும்பாமைக்குக் காரணம் நீ இன்னொருவனை விரும்புவதா..? தயவு செய்து இல்லை என்று சொல்லிவிடு. நீ இன்னொருவனை விரும்புவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. ஜீரணிக்கவும் முடியாது. அப்படி ஒருவனை நீ காதலித்தால் உடனே நான் சன்னியாசம் பூண்டு விடுவேன். உன்னை நினைத்த மனதால் இன்னொருத்தியை என்னால் நினைத்துக் கூட பார்க்க முடியாது. துறவு பூண்டு கோயிலிலே அமர்ந்து விடுவேன். அடுத்த பிறப்பிலாவது எம்மிருவரையும் சேர்த்து வையென்று நான் உயிர்விடும் வரை கடவுளை வேண்டுவேன். இதைத் தவிர வேறு எந்த வழியும் எனக்கு தெரியவில்லை.

காதலில் நம்பிக்கை இல்லாத நீ எப்படிக் காதலிக்க முடியும். காதலை காமத்தின் வடிகால் என்று கூறும் நீ எப்படி ஒரு ஆடவனை விரும்புவாய் என்று நினைத்து நானே எனது மனதிற்கு ஆறுதல் கூறியிருக்கிறேன். எனவே தயவு செய்து உனது முடிவை சீக்கிரம் தெரிவித்து விடு.

ஜனனி பாவம். அவள் என்னைப் பார்க்கக் கூட விரும்புகிறாள் இல்லை. அவள் கடைசி வரையும் உன்னோடு கதைக்க மாட்டாள். எனவே உனது முடிவை தபால் மூலம் என் அலுவலகத்திற்கு அனுப்பு. உடனே அனுப்பு. நீ தாமதிக்கின்ற ஒவ்வொரு கணமும் என்மனம் சித்திரவதைப்படுகின்றது.

**உன்னை நினைத்துருகும்,**

**கரன்.**

# 4

நீ எழுதிய இரண்டு கடிதங்களும் கிடைத்தன. யாரிடமும் எழுதிய கடிதங்களை கொடுத்தனுப்ப முடியாததால் தான் தபாலில் அனுப்புவதாக எழுதியிருந்தாய். தயவு செய்து தபாலில் கடிதங்களை அனுப்ப வேண்டாம். இவ்வளவு நாட்களும் அலுவலகத்திற்கு எனக்குக் கடிதம் வருவதில்லை. இப்பொழுது வந்ததும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசிக்கொள்கிறார்கள். அதை என்னால் சகிக்க முடியாது. ஒரு பெண் இப்படிக் கேவலமாக எழுதியும் உனக்கு ரோசம் வரவில்லையா..? இப்படி நான் எழுதுவதே தப்பு. ஏனென்றால் காதலிப்பவனுக்கு ரோசநரம்புகள் அறுந்துவிட்டதாக எழுதிய பின்பும் நான் கேவலமாகவோ கோபமாகவோ எழுதிப்பயனில்லை. அதனால் மிகவும் தாழ்மையாக எழுதுகிறேன். தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம். நான் அதை எப்படி எழுதினாலும் அதை உன் பக்கத்திற்கே சார்பாக எழுதி வர்ணித்து எனது மனதைக் குழப்புகிறாய். எனக்குள் பெரியதொரு பாரதமே இருக்கு.

காதல் பாசம் பந்தமெல்லாம் வெறும் ஏமாற்று. இலக்கியங்களையும், நாவல்களையும் வாசித்துவிட்டு அவையெல்லாம் புனிதமானவை மேலானவை என்று சொல்லாதே. நான் நம்பமாட்டேன்.

என்னைப் பொறுத்தவரை காதல் மிகவும் கேவலமானது. காமவுணர்வுகளைத் தணிப்பதற்காகப் புனிதம் என்ற போர்வையில் உன் போன்றவர்களால் வர்ணிக்கப்படுவது. ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது போல இலக்கியக் காதலும் வாழ்வுக்கு உதவாது. அத்துடன் இலக்கியங்களிலுள்ள நல்லவற்றை விட்டுவிட்டு காதலை மட்டும் ஏன் தூக்கிப் பிடிக்க வேண்டும். நான் அறிந்த வரையில் காதலிப்பவர்கள் உணர்வுகளுக்கு அடிமையாகி கண்ட கண்டபடியெல்லாம் பிதற்றுவார்கள். ஆனால் அதை நடைமுறையில் யாரும் கைக்கொள்வதில்லை.

எனது தங்கையை ஒருவன் காதலித்தான். அவளுக்கு வயது மிகக் குறைவு. காதலைப் பற்றி அறிய முடியாத வயது. நாங்கள் கண்டித்தோம். பலன் அவள் தான் காதலித்தவனுடன் ஓடிவிட்டாள். பாதுகாப்பிற்காக நாம் பொலிஸிற்கு சென்ற போது அவர்கள் அவளின் வயதைக் கேட்டார்கள். நாங்கள் பதினெட்டென்றோம். அதற்கு பொலிஸார் அவள் மேஜராகி விட்டாள் என்றும் அவளின் விருப்பத்தைத் தாம் தடைசெய்ய முடியாது என்றும் கூறினார்கள்.

அவர்கள் மிகவும் வசதியானவர்கள். அதனால் தகப்பன் அவர்களைப் பிரிப்பதற்காக ஓடித்திரிந்தார். ஆனால் ஆறுமாதம் வரை ஒளித்திருந்தமையினால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆறுமாதம் கழிந்து எனது தங்கை கர்ப்பமாகி விட்டாள். அதனால் தம்மைப் பிரிக்க முடியாது என்றுணர்ந்து இருவரும் வெளிப்பட்டு ஊரில் உள்ள ஒரு வீட்டில் தனிக்குடுத்தனம் ஆரம்பித்தனர். ஓரிரு நாட்கள் தான் அவர்களால் வாழமுடிந்தது. பின் அவனது தகப்பன் அவனைப் பலவந்தமாக பிடித்துக் கொண்டு போய்விட்டார். அதன்பின் அவன் கனடாவிற்குப் பயணமாகி விட்டான். தேடுவாரற்று இருந்த எனது தங்கையை நான் போய் அழைத்து வந்தேன். இப்பொழுது மூன்று வயதில் ஒரு பொம்பிளைப் பிள்ளை இருக்கிறது. அயலவர் ஒருவரிடம் அவனது ரெலிபோன் நம்பரைக் கேட்டு வாங்கி எனது தங்கை போன் பண்ணினாள். ஒரு நாள் தான் அவனைப் பிடிக்கமுடிந்தது. மிகவும் கவலைப்பட்டான். தான் எப்படியும் அவளைக் கனடாவிற்கு அழைப்பதாகச் சத்தியம் பண்ணினான். அதுவரை தான் வாழ்க்கைச் செலவிற்கு பணம் அனுப்புவதாகக் கூறினான். நாட்கள் சென்றனவே தவிர பணம் வரவில்லை. எனது தங்கை நம்பிக்கை இழக்கவில்லை. தொடர்ந்து டெலிபோன் பண்ணினாள். பெரும்பாலான வேளைகளில் அவனைப்பிடிக்க முடியவதில்லை. தப்பித்தவறிப் பிடித்தாலும் அவன் ஒழுங்காகப் பேசுவதில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்பு தாய்மாமன் தனது மகளை நிச்சயம் செய்து கொழும்புக்கு அனுப்பினார். சென்றவாரம் அவனுக்கு ஐந்து நட்சத்திரக் ஹோட்டல் ஒன்றில் வெகுவிமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. ஊரில் உள்ள ரெயிஸ்டர் அலுவலகத்தில் கல்யாணப்பதிவு இருக்கிறது. பிள்ளை அவனின் பெயரில் பதிவாகியுள்ளது. அப்படியிருந்தும் மனசாட்சி இல்லாமற் மிருகத்தனமாக நடந்து கொண்டான். இப்பொழுது எனது தங்கைக்கு மனநிலை சரியில்லை. தனக்குத் தானே கதைக்கிறாள். தேவையில்லாமற் சிரிக்கிறாள். பிள்ளையைக் கவனிப்பதேயில்லை.

இது தான் புனிதமான காதலா..? காதல் தெய்வீகமானதென்றால் என் தங்கைக்கு ஏன் இப்படி நடந்தது? புனிதமான காதலென்றால் என் தங்கையை விட்டு விட்டு இன்னொருத்தியைச் செய்வானா? நான் ஒரு நூலில் படித்திருக்கிறேன். ஆண்களில் பலர் ஏமாற்றுக்காரர்கள். காதலிக்கும் போது பெண்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எந்த வேளையிலும் தொடக்கூடவிடக் கூடாது. அது உண்மை. ஊரில் காதலித்தவர்களைப் பற்றி இன்னும் கேவலமான கதைகள் உண்டு. பெற்றோரின் விருப்பப்படி திருமணம் செய்யுங்கள். திருமணம் செய்தபின் கட்டியவளை உயிருக்குயிராகக் காதலியுங்கள். ஏனெனில் பெற்றோர் சீர்வரிசையுடன் பெண்ணைத் தேர்ந்தெடுப்பதால் பொருளாதாரக் கஷ்டம் இராது. பெற்றோரும் மகிழ்வாக இருப்பர். சாஸ்திர சம்பிரதாயங்களும் தேவையில்லை. ஓர் ஏழைப்பெண்ணைத் திருமணம் செய்ய எந்தப்

பெற்றோரும் விரும்பமாட்டார்கள். தயவு செய்து எனக்குக் கடிதம் எழுதித் தொந்தரவு செய்யாதீர்கள்.

**இப்படிக்கு,**

**காதலை வெறுக்கும்,**

**யாழினி.**

# 5

உமது கடிதத்தைப் பத்துத்தரம் வாசித்தேன். உமது குடும்பத்தின் சோகமான வரலாற்றையறிந்து மிகவும் வேதனைப்பட்டேன். எனது மனதிற்கினியவளுக்கு இப்படித் துன்பத்தைக் கொடுத்த கடவுளின் மீது எனக்கு வெறுப்பாய் உள்ளது. இராமாயணம், மகாபாரதத்திலுள்ள கெட்டவர்கள் தான் தற்பொழுது உலகில் வாழ்வதாக எழுதியிருந்தாய். கெட்டவர்களையும் நல்லவர்களையும் கொண்டது தான் உலகம். எல்லோரும் நல்லவர்களாக இருந்தாலும் உலகில் இன்பம் இராது. நேர்மையாகவும், நீதியாகவும், கடமை தவறாதும் வாழ்ந்தவர்களுக்குத் தான் வாழ்க்கையில் சோதனைகளும் வேதனைகளும் வந்தடைகின்றன. இராமன் எவ்வளவு துன்பப்பட்டான். பாண்டவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டனர். அரிச்சந்திரன் தனது மனைவியையும் மகனையும் விற்று மயானம் காத்தான். இவர்களெல்லாம் துன்பங்கள் துயரங்கள் வந்தபோதும் கலங்காமல் தர்மநெறிகளில் வாழ்ந்தமையால் தான் இன்றும் பேசப்படுகிறார்கள். புகழப்படுகிறார்கள். அதே போல் உமக்கு வந்த துன்பங்களையும் துயரங்களையும் தைரியமாகத் தாங்கிக் கொள்ளும் என்றோ ஒரு நாள் விடிவு கட்டாயம் வரும்.

மனதைச் சோரவிடாது மனம் குழம்பாது தைரியமாக வாழ்ந்தால் துன்பங்கள் துயரங்கள் யாவும் பறந்துவிடும். உமது தங்கை ஏமாற்றுக்காரன் ஒருவனால் தனது இன்ப வாழ்வை இழந்திருக்கலாம். ஆனால் இந்த நாட்டில் நடைபெறும் கொடிய யுத்தத்தால் வாழ்வை இழந்தவர்கள் எத்தனை பேர். எனது அலுவலக நண்பனின் சகோதரிக்கு பெற்றோர் பேசித் திருமணம் செய்து வைத்தனர். மாப்பிள்ளை பட்டதாரி ஆசிரியர். பத்து இலட்சம் ரூபா காசாகக் கொடுத்தார்கள். மிகவும் ஆடம்பரமான முறையில் திருமணம் நடைபெற்றது. மூன்றாம் மாதம் அவன் ஷெல்பட்டு துடிதுடித்து இறந்துவிட்டான். மூன்று மாதம் மட்டுமே வாழ்ந்த அந்தப் பெண் மறுமணம் பேசிவந்த போதும் செய்யமறுக்கிறாள். தான் வாழ்ந்த மூன்றுமாத வாழ்க்கையில் தன் கணவன் தன்மீது செலுத்திய அன்பை அவளால் மறக்க முடியவில்லை. அவளுக்கு ஐந்து ஆண் சகோதரர்களில் நால்வர் வெளிநாட்டில் இருக்கிறார்கள். கோடிக்கணக்கில் சொத்திருக்கு. திருமணம் செய்யவும் சிலர் முன்வந்திருக்கின்றனர். ஆனால் அவள் அதை விரும்பவில்லை. இதை ஏன் நான் உனக்கு எழுதினேன் என்றால் உண்மையான அன்புள்ளவர்கள், அன்பைப் புனிதமாக நினைக்கின்றவர்கள் இன்றும் இவ்வுலகில் வாழ்கிறார்கள். பலர் காதலை

இச்சைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்துகிறார்கள் தான். ஆனால் எல்லோரும் அப்படியல்ல. காதலில் மட்டுமா ஏமாற்று நடக்கிறது? வாழ்க்கையில் பெரும்பாலனவற்றைப் பலர் ஏமாற்றி பிழைப்பு நடத்துகிறார்கள். உதாரணமாக வெளிநாட்டுக்குச் சென்ற எத்தனை பேர் தமது பெற்றோர்கள் உடன் பிறப்புக்களைக் கவனிக்கிறார்கள். எனது உறவினர் ஒருவருக்கு ஐந்து பிள்ளைகள். ஐந்தும் வெளிநாட்டில்.

பெற்றோர் வயோதிபர்கள். எழுபது வயதைக் கடந்தவர்கள்.

அவர்களைப் பராமரிக்க யாரும் இல்லை. அயலவர்களும், உறவினர்களும்தான் பராமரிக்கின்றனர். தகப்பன் நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் ஒரு மாதம் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார். அவரைப் பராமரிப்பதற்குக் கூலிக்கு ஆள்ஒழுங்கு செய்யப்பட்டது. உணவு கொண்டு போய்க்கொடுக்கக்கூட யாரும் இல்லை. ஆஸ்பத்திரிக் கன்ரீனிலும் கடையிலும் தான் கூலிக்குப் பராமரிப்பவன் உணவை வாங்கிக் கொடுத்தான். உற்றார் உறவினர்கள் அவரைப் பார்க்கச் செல்லும் வேளைகளில் அம்முதியவரின் கண்கள் கலங்குவதைப் பார்க்க வேதனையாக இருக்கும். ஆயிரம் ஏக்கரில் கரும்புத் தோட்டம் வைத்திருக்கும் ஒருவன் நீரிழிவு காரணமாக ஒரு கரண்டி சீனியைச் சாப்பிட முடியாத நிலையில் இருப்பதைப் போல இன்று எமது நாட்டில் எல்லாம் இருந்தும் அன்பில்லாமல் பலர் ஏங்குகிறார்கள்.

காதலைப் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு அபிப்பிராயத்தை வைத்திருக்கின்றார்கள். நீர் உமக்கு விரும்பியபடி நினைக்கலாம். ஆனால் பொது நோக்கு ஒன்றுள்ளது. நெருப்பு ஆக்கவும் பயன்படுகிறது அழிக்கவும் பயன்படுகிறது. நாம் ஏன் அழிதலுக்குப் பயன்படுத்துவான்.

நல்லதையே நினைப்போம். நல்லதையே செய்வோம் என்றிருந்தால் துன்பம் வராது. ஒன்றை நல்லதாக நினைத்தால் நல்லதாகவே தெரியும். நீரும் காதலை நல்லதாகவே நினைத்துப்பாரும். உமது தங்கையை அவன் ஏமாற்றியது போல் நான் உம்மை ஏமாற்றமாட்டேன். என்உயிரோடு கலந்துவிட்ட உமது நினைவுகளை என்னாலேயே பிரிக்கமுடியவில்லை. நீர் இல்லாத வாழ்க்கையை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாது.

நாலைந்து தினங்களாக உம்மை வீதியில் காணவில்லை. வெள்ளிக்கிழமை அலுவலகத்திற்கு லீவு போட்டுவிட்டுக் காலை ஆறு மணிக்கே உமது வீட்டிற்கு அருகில் வந்து நின்றேன்.

பன்னிரண்டு மணிவரை காத்திருந்தும் பலன் ஏற்படவில்லை. ஒருவாரமாக உம்மைக்காணாததால் உள்ளம் வாடிச்சோர்ந்து விட்டது. ஏதாவது சுகயீனமா? யாரை விசாரிப்பது?.

ஜனனியைச் சந்தித்துக் கேட்டேன். அவள் என்னுடன் கதைக்க மறுத்துவிட்டாள். யாழினியின் கதையே என்னுடன் கதைக்கக் கூடாதென்று கூறிவிட்டாள். இந்த வாரம் மிகவும் துன்பப்பட்டுவிட்டேன். துன்பத்திலும் ஓர் இன்பம் இருக்கிறது. துயரமான வேளைகளில் உமது அழகிய தோற்றத்தை மீட்டும் போது என்றுமில்லாத இன்பத்தில் மனம்மிதக்கின்றது. அந்த

நினைவுகளிலே பொழுதைக் கழிக்கின்றேன். தயவு செய்து எனக்கு நிம்மதியான பதிலைத் தரவும்.

**உன் நினைவுகளில் வாழும்,**

**கரன்.**

# 6

**அன்பான யாழினி,**

உன்னை ஒரு மாதகாலமாகக் காணாது என் கண்கள் சோர்ந்து வாடிவிட்டன. இதயம் துடிக்க மறந்துவிட்டது. மொத்தத்தில் நடைப்பிணமாக உலவுகிறேன். எனது அன்புக்குரியவளுக்கு என்ன நடந்தது என்று அறியமுடியாத பாவியாக இருக்கின்றேன்.

நாலைந்து தினங்களாக உம்மைக் காணாமையால் துடித்துப்போன நான் உமது வீட்டுப்பக்கமாக தொடர்ந்து அலைந்து திரிந்தேன். உங்கள் வீட்டுக்கு வரும் சந்தியில் ஓர் ஆமிச் சென்றியுள்ளது. அயலில் உள்ளவர்கள் நான் வரும் போது என்னை ஆச்சரியமாகப் பார்ப்பார்கள். தமக்குள் ஏதோ கதைப்பார்கள். அவைகளொன்றும் எனக்குப்புரிவதில்லை. புதன் கிழமை மாலை ஐந்து மணிக்கு மூன்று மோட்டார்சைக்கிளில் ஆறு இராணுவத்தினர் வேகமாக வந்து என்னைச் சுற்றி வளைத்துப் பிடித்தனர். ஏதோ பெரியதொரு புலிப் பேராளியைக் கைது செய்வது போன்ற நடவடிக்கைகள் எடுத்தே என்னைக் கைது செய்து நகரிலுள்ள பெரியதொரு இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர். அங்கு நடந்தவற்றை உமக்கு எழுத முடியாது. அவ்வளவு கொடுமை. பின் எனது பெற்றோருக்கு அறிவித்தனர். மூன்றாம் நாள் எமது பகுதி கிராமசேவகரும், எனது வேலைத்தள தலைமை அதிகாரியும் வந்து என்னைப் பிணையில் எடுத்தனர். இராணுவமுகாமில்பட்ட சித்திரவதைகளைவிட வீட்டில்படும் சித்திரவதைதான் அதிகம். அப்பாவும் அம்மாவும் சம்பந்தமில்லாத அந்த ஊருக்கு ஏன் போனாய் என்று கேட்டு நச்சரிக்கிறார்கள். அதைவிட வேலையை விட்டுவிட்டு வெளிநாட்டுக்குச் செல்லும்படி வற்புறுத்துகிறார்கள். எனது

சகோதரன் ஒருவன் கனடாவில் இருக்கிறான். அவன் அடிக்கடி என்னுடன் தொடர்பு கொண்டு கொழும்புக்கு வரட்டாம். நான் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறுகிறேன்.

தினமும் என்மனதிற்கு நானே ஆறுதல் கூறிக்கொண்டிருக்கிறேன். எல்லா விசயத்திற்கும் என்னால் ஆறுதல் கூறுமுடியாது. உம்மீது கொண்ட தீராத காதலுக்கு மட்டும் ஆறுதல் கூறமுடியவில்லை.

அன்பே உன்னைக்காணாமல் ஒரு நிமிடம் கூட இருக்க முடியவில்லை. உனது தரிசனத்திற்காக ஏங்குகிறேன். கடைசியாக சென்ற மாதம் பதினைந்தாம் திகதி பஸ்தரிப்பில் கண்ட கோலம் இன்றும் என்மனதைவிட்டு அகலவில்லை. இரண்டு வருடகாலமாக உம்மை நிழலைப் போல் பின்தொடர்ந்து வருகிறேன். ஆனால் அன்று உம்மை வித்தியாசமான ஒரு தோற்றத்தில் கண்டேன். மிகவும் எளிமையாக ஆர்ப்பாட்டம் இல்லாது அழகு செய்துவரும் நீர் அன்று முதல் தடவையாக தோளில் சுருக்குவைத்த மண்ணிற சட்டை அணிந்திருந்தீர். அதற்கேற்றாற் போல மஞ்சளும் மண்ணிறமும் கலந்த சாறி உமக்கு மிகவும் எடுப்பாக இருந்தது. வழக்கமாகப் பின்னலை அலங்கரிக்கும் பிளாஸ்திக் மல்லிகை மொட்டைக் காணவில்லை. நறுமணம் கமழும் மல்லிகைப் பூக்கள் கூந்தலை நிறைத்திருந்தன. அழகான எடுப்பான காதுகளில் தூக்கணம் ஒன்று சில்லுடன் தொங்கிக் கொண்டிருந்தது. நெற்றியில் வைக்கப்பட்ட இரட்டைப்பொட்டுக்கள் கவர்ச்சியின் எல்லைக்கே உம்மைக் கொண்டு சென்றுவிட்டன. பிரம்மா வஞ்சகம் செய்யாது திருமகளுடன் கூடிக்குலாவிக்களித்திருந்த போது உம்மைப் படைத்திருப்பானோ என எண்ணத் தோன்றுகிறது. நான் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கின்றேன். எவ்வளவு அலங்காரப் பொருட்களை உபயோகிக்கின்றார்கள். அவை வெறும் பவுடர்களாகவும் மைகளாகவும் எனக்குத் தோன்றுகின்றன. எந்தவித அலங்காரப் பொருட்களையும் உபயோகிக்காத உமது பேரழகு என்னைத் தடுமாற வைக்கிறது.

அன்பே என் சொத்துச் சுகம் நீ. இன்பம் நீ. மனச்சாந்தி நீ. சுருக்கமாகச் சொன்னால் என் உலகமே நீ தான். என் உடல் பொருள், ஆவி அனைத்திலும் வியாபத்திருக்கும் உனது துயரைப் பகிர்ந்து கொள்ளவிரும்புகிறேன். உனக்கு நேர்ந்தவற்றைச் சொன்னால் என் உயிரைக்கொடுத்தாவது அதை நிவர்த்தி செய்ய முன்வருவேன். உனக்கு வருத்தமா..? அல்லது உன் உடன் பிறப்புக்களுக்கு ஏதாவது வருத்தமா..? எதையும் அறியமுடியாது கலங்கித்தவித்தமையால் தான் நான் பலமுறை உமது கிராமத்திற்கு வந்து அகப்பட்டேன். இப்பொழுதும் உன்னை என்கண்கள் தேடுகின்றன. மனம் உன்னைக்காண முயல்கிறது. உன்நினைவுகளில் மூழ்கியிருக்கும் எனக்கு உனது வீட்டுக்கு வரப்பயமாயுள்ளது. நீ வரவேற்பாயா என்ற பயமே தவிர படைவீரர்களுக்குப் பயமில்லை. இந்தக் கடிதத்திற்கு பதில் அனுப்பாவிட்டால் யார் எதிர்த்தாலென்ன உமது வீட்டுக்கு வருவேன். காதலிப்பவனுக்குத் துணிவு தானாகவே வரும். அந்தத் துணிவு எதையும் செய்யவைக்கும். எவ்வளவோ எழுதியும் இரக்கப்படாத உனது இதயம் இரும்பாலானதா..? அன்பே உடலை விட்டுப்பிரியப்போகும் எனது உயிரைப் பிடித்து உனது இதயத்துள் அடைக்கமாட்டாயா..? தற்செயலாக நான் இறந்தாலும் ஆசைகள் நிறைவேறாததால் பேயாக, பிசாசாக உன்பின்னால் அலைவேன்.

அப்படி அலையும் போது உனது மனதை மட்டுமல்ல உடலையும் தொட்டு துயரமடைய வைப்பேன். இந்த நிலை உனக்கு தேவையா..? தயவு செய்து இக்கடிதத்திற்கு மகிழ்ச்சியான பதிலைத் தந்து எனது மனதைக் குளிரவை. இல்லாவிட்டால் ஒரு மாதகாலமும் உனக்கு என்ன நடந்தென்றாவது கூறு. தயவு செய்து என்னைச் சித்திரவதை செய்யாதே.

**மனச் சாந்தியை நாடும்**

**கரன்.**

# 7

**கரனுக்கு,**

உனது கரைச்சல் தாங்க முடியாததால் தான் நான் இடமாற்றம் பெற்று ஊரில் இருந்து இருபத்தைந்து மைல்களுக்கப்பால் உள்ள அலுவலகமொன்றில் வேலை பார்க்கிறேன். அந்த ஊருக்கு யாரும் போவதில்லை. போக்குவரத்தில்லை. மின்சாரமில்லை. குடிநீர் இல்லை. மிகவும் ஏழ்மையான மக்கள் வாழும் கஷ்டப் பிரதேசம். அமைச்சிலிருந்து யாராவது ஒரு வரை நியமிக்கும்படி வற்புறுத்திக் கொண்டே இருந்தார்கள். ஆனால் அக்கிராமத்திற்குச் செல்ல எவருக்கும் விருப்பமில்லை. நான் விரும்பி எனது மேலதிகாரியைக் கேட்ட போது அவர் என்னை அதிசயமாகப் பார்த்தார். பின் நன்றாக யோசித்து சொல்லும் ஆண்களே பின்னுக்கு நிற்கும் போது நீர் ஏன் போகநினைக்கிறீர் என்று கேட்டார். நான் அவருக்கு உனது கரைச்சலைப் பற்றிக் கூறமுடியுமா என்ன..? எனக்கு அங்கே இனத்தவர்கள் இருப்பதாகக் கூறினேன். அவர் சம்மதித்து இடமாற்றம் தந்தார். உனது கரைச்சல் இல்லாமல் இருப்பதற்காகத் தான் நான் இடம்மாற்றம் கோரினேன். ஆனால் நான் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை. நீ எனக்கு அலுவலகத்திற்கு எழுதிய கடிதங்களை அவர்கள் எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். எந்தக்காரணத்திற்காகச் சென்றேனோ அது நடக்கவில்லை. அத்துடன் என் வீட்டுக்கு வரப்போவதாக மிரட்டியிருக்கிறாய். அதனால் தான் இக்கடிதத்தை எழுதுகிறேன். தயவு செய்து என்னை நிம்மதியாக இருக்கவிடு. உனக்கு கோடி புண்ணியம் கிடைக்கும். தினமும் நான் எனது குலதெய்வமான பிள்ளையாரை வணங்கும் போது உனது கரைச்சல் நீங்க வேண்டும் என்று தான் வணங்குவேன். இனிமேல் உனது கை செயலிழக்க வேண்டும் என்று வணங்கப்போகிறேன்.

எந்த ஒரு பிரச்சினையால் எனது நிம்மதி பறந்ததோ அதே பிரச்சினை மீண்டும் வந்திருக்கிறது. இனிமேல் உண்மையை மறைத்து வைக்க முடியாது. அதனால் எழுதுகிறேன். எனக்கும் எனது வீட்டாருக்கும் தெரிந்த இந்தப் பிரச்சினை மூன்றாவது ஆளான உனக்கும் தெரியப்போவதை நினைக்க வேதனையாக இருக்கிறது.

வசந்தகாலம் பூமிக்கு மட்டும் வருவதில்லை. ஒவ்வொரு பெண்களுக்கும் வருகிறது. பாடசாலையில், கற்கின்ற காலம் பொற்காலம் என்று கூறுவார்கள். கஷ்டங்கள், கவலைகள் துன்பங்களின்றி வாழ்கின்ற காலம். அந்தக் காலத்தில் என்னுடன் படிக்கின்ற மாணவன் ஒருவன் உன்னைப் போல் பேயாக எனக்குப் பின்னால் அலைந்தான். ஆரம்பத்தில் அவனைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது. ஆனால் நாளடைவில் அவனின் தரிசனம் எனக்குத் தினமும் தேவைப்பட்டது. அவனைக் காணாவிட்டால் உயிரே போய்விடும் போலிருந்தது. அவனது வரவிற்காக எனது கண்கள் ஆவலோடு காத்துக்கிடந்தன. மனம் அவனது பேச்சைச் சதா அசைபோட்டுக் கொண்டிருந்தது. நான் ஏ.எல். பரீட்சை எடுத்துவிட்டுக் கொம்பியட்டர் கல்வி கற்பதற்காக யாழ்ப்பாணம் சென்ற போது அவனும் கூடவந்தான். எமது கிராமத்தில் இருந்து பத்துமைல்களுக்கப்பால் நாம் உல்லாசமாகப் பொழுதைக் கழித்தோம். தினமும் அருகில் இருந்து கட்டுப்பாடுகளற்றுப் பழகியதால் எமது தொடர்பில் இறுக்கமேற்பட்டது. தொடர்ந்து அன்பான வார்த்தைகளால் மனதில் நெகிழ்ச்சி ஏற்பட்டது. ஊரவன், இனத்தவன் எமது குடும்பப் பிரச்சினைகளெல்லாம் அறிந்தவன் என்பதால் ஏமாற்றமாட்டான் என்று நினைத்தேன். அதனால் அவன் மீது நான் வைத்த அன்பு, நம்பிக்கை கொள்ள வைத்தது. தினமும் அவன் எப்படியெல்லாம் கதைப்பான். சத்தியம் பண்ணுவான். அத்துடன் அவனது குடும்பம் எமது கிராமத்தில் நல்லொழுக்கத்துடன் வாழும் குடும்பம். தகப்பனார் நீதி நெறி தவறாதவர் என்று கிராமமக்கள் பேசிக்கொள்வார்கள். அதனால் அவனை நம்பினேன். அதனால் அவனது விருப்பங்களைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் நான் இருந்தேன்.

ஒரு நாள் என் அருகில் வந்து குழைந்தான். என்றுமில்லாதவாறு அன்று அவன் நடந்து கொண்டமுறை எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என்ன என்று கேட்டேன். அவன் படத்திற்குப் போவோமா? என்று கேட்டான். எனக்கும் அவனுடன் தனிமையாகக் கொஞ்சநேரம் கதைக்க வேண்டும் என்ற ஆவல் மனதில் பூத்திருந்தது. கொஞ்சம் சிரமப்பட்டுச் சம்மதித்தேன்.

இருவரும் படத்திற்குச் சென்றோம். பல்கனியில் இரண்டு சோடிகள் இருந்தன. அவர்களைப் பார்த்தால் அவர்களும் எங்களைப் போன்றவர்கள்தான் என்று நான் நினைத்துக் கொண்டேன். படம் ஆரம்பித்தது. எனக்கருகில் இருந்த அவனின் முழங்கை எனது முழங்கையுடன் ஒட்டிக்கொண்டிருந்தது. திரும்பிப் பார்த்தேன்.

அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். இருட்டிலும் அவனது கண்களில் தேங்கி நின்ற உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவனது விழிகளில் உள்ள கோரம் என்னைச் சற்று மிரட்சியடைய வைத்தது. தலையைக் குனிந்து கொண்டேன். நிலத்தைப் பார்க்கவா வந்தனீர், படைத்தைப்பாரும் என்றவாறு எனது தலையை நிமிர்த்தினான். முதல் தடவையாக ஒரு அன்னிய ஆடவனின் கை என்னைத் தொட்டு ஸ்பரிசித்தது. அதன்பின் நடந்ததை எழுத முடியாது. என் அனுமதியில்லாமல் அவனது கைகள் என்உடல் எங்கும் சுதந்திரமாக உலாவிச் சென்றன.

அதன் பின் பல படங்களுக்குச் சென்றோம். அங்கு நடந்தவற்றை நீங்கள் உங்கள் மனத்திரையில் பாருங்கள். பின் ஒருநாள் அவன் எனது வீட்டுக்கு வந்தான். அன்று வீட்டில் யாரும் இல்லாததால் அன்று எல்லாமே நடந்து முடிந்துவிட்டது. ஓரிரு மாதங்கள் செல்ல அவன் கொழும்பில் ஒரு வங்கியில் வேலையாகிச் சென்றுவிட்டான். இப்பொழுது ஐந்து வருடங்கள் கழிந்துவிட்டன. அவன் கொழும்பில் உள்ள வங்கியொன்றில் உதவி முகாமையாளராக வேலை பார்க்கிறான். நான் கடிதங்கள் பல எழுதினேன். பதில் கிடைக்கவில்லை. அவனது நண்பர்களிடம் விசாரித்த போது அவர்கள் சிரித்தார்கள். அவன் கல்யாணம் செய்வதனால் ஊரிலேயே பத்துப் பேரைச் செய்ய வேண்டும் என்றார்கள். அப்படியான அயோக்கியனுக்கு ஊரிலுள்ள பெரிய பிரமுகர்களின் வீட்டில் கல்யாணம் நடைபெற்றது. பெரிய உத்தியோகத்தில் உள்ள ஒழுங்கான குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஒருவனைக் கல்யாணம் செய்ய அந்தப் பெண்ணும் குடும்பமும் கொடுத்து வைத்தது என்று ஊரில் பேசிக் கொண்டார்கள். சகலவற்றையும் பறிகொடுத்த நான் உனக்குத் தேவையா..?

**மறக்கும்படிகேட்கும்,**

**யாழினி.**

# 8

**அன்பான யாழினி,**

உமக்கு நேர்ந்த துன்பத்தை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. உமக்கும் காதலிக்கத் தெரியுமா? என்பதை நினைக்க எனக்கு ஆச்சரியமாகவுள்ளது. நான் கண்ட யாழினியின் மனம் ஒரு ஆடவனுக்கு இரங்கியதா என நினைக்கும் போது பேரதிர்ச்சியாக உள்ளது. ஒரு பெண் களங்கப்பட்டு விட்டால் எந்த ஆடவனும் ஏற்கமாட்டான் என்பது தான் பெண்களின் வாதம். எல்லா ஆண்களும் ஏற்காவிட்டாலும் ஆயிரத்தில் ஒருவன் இல்லை இலட்சத்தில் ஒருவன், இல்லை கோடியில் ஒருவன் கூட இருக்கமாட்டானா..? அன்பே, எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒரு கவர்ச்சி, ஒரு எழில், ஒரு வசீகரம் உம்மிடம் கொட்டிக்கிடக்கிறது. அந்தக் கவர்ச்சியை, அந்த எழிலை, அந்த வசீகரத்தை என்கண்கள் இழக்கவிரும்பவில்லை. உம்மையொருவன் ஏமாற்றியிருக்கலாம். நீர் அவனிடம் இழக்கக்கூடாததை இழந்திருக்கலாம். ஆனால் என்மனது உம்மை இழக்கத் தயாராக இல்லை.

தற்பொழுது நடைபெற்று வரும் யுத்தத்தில் எத்தனையோபேர் எவ்வளவற்றையோ இழந்துவிட்டார்கள். எத்தனையோ பெண்கள் கணவனை இழந்துள்ளார்கள். எமது பிரதேசத்தில் எவ்வளவு விதவைகள் இருக்கிறார்கள் தெரியுமா? ஔவையாரின் பாடல் ஒன்றுள்ளது. இளமையில் வறுமை கொடியது என்று. அதைவிடக் கொடியது இளமையில் பெண்கள் தமது கணவனை இழப்பது. உணவு, உடை உறையுள் என்பன ஒருவனுக்கு எவ்வளவு முக்கியமோ அதேபோல இல்வாழ்வும் முக்கியம். ஒரு பெண்ணுக்கு உறுதியான கணவன் இருப்பது போல ஓர் ஆணுக்கு இளமையான மனைவியும் இருத்தல் வேண்டும். உணர்வுகள் காட்டாற்று வெள்ளத்தைப்

போன்று தறிகெட்டு ஓடும். அதை அடக்கினால் தான் இன்பமான இல்வாழ்வு கிடைக்குமென்று எமது சமயம் போதிக்கின்றது.

நீ உடலால் கெட்டிருக்கலாம் கெட்டிருக்கிறாய். நம்பிக்கையின் அடிப்படையில் காதலர்களிற்கிடையே இப்படி நடப்பது இயற்கை. ஆனால் நம்பிக்கையுடையவனாக நடந்தவன் நயவஞ்சனாக மாறினால் என்ன செய்ய முடியும்? ஆகையால் நடந்தவற்றை கெட்டகனவாக நினைத்து மறந்துவிடுவதுதான் நல்லது.

நான் எந்த வேளையிலும் பழைய வரலாற்றை நினைவுபடுத்த மாட்டேன். பெண்ணோ ஆணோ சந்தர்ப்பம் சூழ்நிலைகளால் பாதிக்கப்படுவது இயல்பு. அதையே நினைத்து வாடுவது தவறு. எனவே தயவு செய்து நடந்தவற்றை மறந்து புதுவாழ்விற்கு ஆயத்தமாகு. சிலவேளைகளில் அந்தப்பாதிப்பால் ஒரு குழந்தை கூட இருந்தாலும் நான் உம்மை அந்தக் குழந்தையுடன் ஏற்பேன். எமது பிரதேசத்தில் வாழ்பவர்கள் மனிதர்களாக மட்டும் வாழமுடியாது. அவர்களெல்லாம் தெய்வங்களாகவும் மாறவேண்டும். எமது நாட்டைப் பொறுத்தமட்டில் வாழ்விழந்த பெண்களுக்கெல்லாம் வாழ்வு கொடுத்தல் வேண்டும். ஊரில் வீட்டிற்கு வீடு பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சகலவற்றையும் அனுபவிக்க வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று நினைப்பவன் நான்.

எனது கரைச்சலால் தான் நீர் இடமாற்றம் பெற்று ஆட்களற்ற வனாந்திரப் பிரதேசத்திற்குச் சென்றதாக எழுதியிருந்தீர். அது தான் எனக்கு வேதனையாகவுள்ளது. என்னை நாய், பேய், இரக்கமில்லாதவன், ரௌடி என்றெல்லாம் நீர் எழுதியபோது கவலைப்பட்டதில்லை. என்னால் தான் இடமாற்றம்பெற்றுச் சென்றதாக எழுதியதை என்னால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை. அதை நினைத்துதான் தினமும் கவலைப்படுகிறேன்.

என்னால் நேசிக்கப்படும் ஒரு பெண்ணுக்கு என்னாலே துன்பம் வந்ததை சகித்துக் கொள்ள முடியவில்லை.

தொடர்ந்து நான் கடிதம் எழுதினால் புண்பட்ட உமது மனம் மேலும் பாதிப்படையும். எனவே நான் இனிக்கடிதம் எழுதமாட்டேன். தொந்தரவுகள் தரமாட்டேன். நீர் கஷ்டப்படாமல் இருப்பதுதான் எனது விருப்பம். எனவே தயவு செய்து இடமாற்றம் பெற்று ஊரோடு வந்து வாழவும். அதனால் உமது மனதிற்கு ஆறுதல் கிடைக்கும். குடும்பத்தோடு சேர்ந்து வாழ்ந்தால் மனதிற்கு நிம்மதியும் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். ஓர் அன்புள்ளவன் தான் விரும்பும் பெண்ணின் நல்வாழ்வையும் மனஆறுதலையும் தான் விரும்புவானே தவிர உடலை விரும்பமாட்டான். உம்மை நான் தொந்தரவு செய்யவில்லை. ஆனால் என்னுயிர் உள்ளவரை விரும்புவேன். உமக்காகவே வாழ்வேன். எனது அன்பைப்புரிந்து நீர் எப்பொழுது வந்தாலும் மகிழ்வுடன் ஏற்பேன். உண்மையான காதல் உயிருடன் தொடர்புடையது. உள்ளத்துடன் கலந்திருப்பது உணர்வுகளுக்கு அடிமையாகாதது என்பதை நீர் புரிந்து கொள்ள வேண்டும். உமக்கு நேர்ந்த துன்பங்களால் நீர் எதிர்மாறான கருத்தைக் கொண்டிருக்கிறீர். நீர் எனக்கு எழுதிய கடிதங்களில் இருந்து அது புலனாகிறது. எனக்கும் ஒரு துன்பம் நேர்ந்திருந்தால் நானும் அப்படித்தான்

இருந்திருப்பேன். மனிதனைச் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் தான் வழிநடத்துகின்றன. நல்ல சூழலில் வாழ்பவன் நல்லதையே நினைப்பான். நல்லதையே செய்வான். நான் நல்ல வசதியுள்ள குடும்பத்தில் பிறந்ததால் என்னைப்போலவே எல்லோரும் இருப்பார்கள் என எண்ணிவிட்டேன். உமது துயர், உமது குடும்பநிலைமை என்பவற்றை நான் ஆராயாது நான் நடந்துகொண்ட முறை எவ்வளவு தப்பானது என்று இப்போதுதான் எனக்குப்புரிகிறது. மேலும் உமக்குத் துன்பத்தைத்தர நான் விரும்பவில்லை. என்னை மன்னித்துவிடும். என்றும் உன் நினைவிலேயே வாழ என்னால் முடியும்.

**உன்னுடன் கலந்த கரன்.**

# 9

**அன்பே உருவமான கரனுக்கு,**

உங்கள் கடிதம் கிடைத்தது. பல முறை திருப்பித்திருப்பி வாசித்தேன். உண்மையில் மனிதன் தானா அக்கடிதத்தை எழுதியது என்ற சந்தேகம் என்மனதை விட்டு இன்னமும் நீங்கவில்லை. ஒவ்வொருவரியையும் வாசிக்க வாசிக்க என் மெய் சிலிர்த்தது. அவற்றை நம்பமுடியவில்லை.

ஒரு பெண் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பலாத்காரமாகக் கூட கெடுக்கப்பட்டாலும் தமிழ்ச் சமூகம் அவளை ஒழுக்கமுள்ளவளாகக் கருதாது கேலிச்சித்திரமாகவே கருதுகிறது. எனக்குத் தெரிந்த, அறிந்த எத்தனையோ பெண்களது காதல் வாழ்வு சிறப்படையவில்லை. இளமைக்கால உணர்வுகளைத் தீர்க்கும் ஓர் இயந்திரமாகவே பெண்களைக் கருதுவதை நான் கண்டுள்ளேன். பல ஆண்கள் காதலிக்கும் போது பேசும் வார்த்தைகளுக்கும் கல்யாணம் என்ற பேச்சை எடுத்ததும் பேசும் வார்த்தைகளுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. காதலிப்பவன் கல்யாணம் என்றதும் தனது குடும்பப்பராமரிப்புக்கும் பணம் கேட்கும் காலம் இது. ஒரு பெண்ணைப் பெற்ற பெற்றோர் கல்யாணத்திற்காகக் கொடுக்கும் சீதனத்துடன் அவர்களது கொடுப்பனவுகள் நின்றுவிடுவதில்லை. பூட்டப் பிள்ளையைக்கண்ட பின்னும் கொடுக்க வேண்டிய நிலையுள்ளது. காதலிக்கும் போது அழகாகத் தோன்றும் பெண்கள் கல்யாணத்தின்பின் மூதேவிகளாகக் கணிக்கப்படுவதை நான் கண்டுள்ளேன். என்னைப் பொறுத்தவரைக் காதலித்துக் கல்யாணம் செய்பவர் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். சிலர் கைவிடப்பட்டிருக்கிறார்கள். சிலர் கணவனைப் பிரிந்திருக்கிறார்கள். சிலர் காதலித்த பெண்ணைப் பிள்ளைகுட்டிகளுடன் தவிக்க விட்டு விட்டு வேறு திருமணம் செய்திருக்கிறார்கள்.

இந்த நிலைமையில் காதலித்துக் கெட்டுப்போன ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய முடிவுகட்டிய உங்களை நான் எதற்கு ஒப்பிடுவது. உலகில் உங்களோடு ஒப்பிடவதற்கு எந்தப்பொருளும் எனக்கு அகப்படவில்லை. எனக்கு உலகில் உள்ள மேலான பொருள் நீங்கள் தான். நான்படும் துன்பத்தைக் கண்டு கலங்கித் தவிக்கும் மனம் உலகில் உங்களுடையதைத் தவிர வேறு எதுவும் இல்லை. எனக்காகக் காத்திருப்பேன் என்று எழுதி இருக்கிறீர்கள்.

என்நினைவுகளிலேயே கலந்திருப்பேன் என எழுதியிருக்கிறீர்கள். நான் மனம் மாறி வரும் வரை காத்திருப்பேன் என்று எழுதியிருக்கிறீர்கள். இதுக்கு மேல் எழுத என்ன இருக்கிறது?. ஓர் ஒழுக்கமான பெண்ணுக்காக ஒரு பணக்கார பெண்ணுக்காக அப்படி எழுதியிருந்தால் அது இயற்கையானது என்று எண்ணலாம். ஆனால் எனக்காகக் காத்திருப்பேன் என்று எழுதிய உங்களை எப்படி வெறுத்து ஒதுக்குவது. நீங்கள் எழுதிய கடிதங்களை அன்றன்றே எரித்துவிடுவேன். ஏனென்றால் அதை வைத்திருந்தால் அதுவே என்னை உங்கள் மீது அன்பு செலுத்த தூண்டிவிடும். எனது சகோதரிக்கு அந்தப் பாதகன் எழுதிய கடிதங்களை படிக்க வேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டது. அந்தக் கடிதங்களும் கிட்டத்தட்ட நீங்கள் எழுதியவை போன்றே இருந்தன. அதனால் காதலிக்கும் இளைஞர்கள் எல்லோரும் பெண்களை ஏமாற்றித் தனது இச்சைகளைத் தீர்க்க வார்த்தை ஜாலங்களை பிரயோகிப்பதாக நினைத்தேன். அந்த நினைவு தவறு என்று உங்கள் கடைசிக்கடிதத்தைப் படித்த போது தான் எனக்கு விளங்கியது. நீ உடலால் கெட்டிருக்கலாம் நம்பிக்கையின் அடிப்படையில் காதலர்களுக்கிடையே இப்படி நடப்பது இயற்கை தான். நம்பிக்கையுடையவனாக நடந்தவன் நயவஞ்சகனாக மாறினால் என்ன செய்ய முடியும்? ஆகையால் நடந்தவற்றை கெட்ட கனவாக நினைத்து மறந்து விடு. இப்படி துணிந்து எழுத உங்களைத் தவிர வேறு யாராலும் முடியாது என்று நான் நினைக்கிறேன். இந்த வார்தைகளுக்கு கீழ் சிவப்பு மையினால் அடிக்கோடிட்டு ஆயிரம் முறை வாசித்திருப்பேன். அவை வெறும் சொற்களாக எனக்குத் தெரியவில்லை. பெரும் பொக்கிசங்களாகவே தெரிந்தன. கடவுளால் தான் உயிர்களுக்கு அனுக்கிரகம் செய்ய முடியும். ஆனால் நீங்கள் எனக்கு அனுக்கிரகம் செய்திருக்கிறீர்கள். அதற்காக நான் எத்தனை பிறவி எடுத்தாலும் உங்களுக்குச் சேவை செய்யக்கூடியவளாக உங்கள் நிழலில் வாழ்பவளாகப் பிறவி எடுத்தல் வேண்டும்.

அன்பே நான் எழுதிய கடிதத்தில் காதல் மீதுள்ள வெறுப்பால் தான் எழுதினேன். அப்படி எழுதியதால் தான் உண்மையான உத்தமனான ஓர் ஆடவனை நான் கணவனாக அடைய முடிந்தது. நான் யாரையும் காதலிக்கவும் இல்லை. தவறாக நடந்து கொள்ளவும் இல்லை. அப்படி எழுதியதற்கும் முதல் எழுதிய கடிதங்களில் தங்களைத் தரக்குறைவாக எழுதியதற்கும் என்னை மன்னிக்கவும். உடன் பதில் தரவும்.

**உங்கள் அன்பில் மிதகஅபலை,**

**யாழினி.**

# 10

**அன்பான யாழினி,**

உமது கடிதம் இன்ப அதிர்ச்சியைத் தந்தது. பெணகள் தான் குடும்பத்தின் கண்கள். சீதனம் என்பது பெண்களால் தான் வளர்கிறது. ஒரு தாய் தான் தன்மகனுக்கு எவ்வளவு சீதனம் வாங்வேண்டும் என்று தீர்மானிக்கிறாள். சீதனத்தை ஒரு போதும் ஆண்கள் தீர்மானிப்பதில்லை.

எமது சமூகம் இன்று பல்வேறு விதமான அழிவுகளில் சிக்கி விலகமுடியாது திண்டாடுகிறது. அந்த வகையில் கற்றறிந்த நான் சீதனமில்லாமல் ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய நினைத்தேன். விதவையானாலும் பரவாயில்லை. எனது சமூகத்திற்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் என்னுடைய வாழ்க்கையில் எதிர்பாராதவாறு நீர் குறுக்கிட்டீர். உம்மை முதன்முதலாக என்கண்கள் சந்தித்த காட்சியை இன்றும் மனம் படம் பிடித்து இதயத்துள் ஓடவிட்டுள்ளது.

மெல்லிய பச்சைப் பாவாடை முழங்காலுக்கு கீழ் கணைக்காலுக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்தது. இடுப்பில் வைக்கப்பட்டிருந்த மடிப்புக்கள் கணைக்கால் வரை அழகாக கலையாது நீண்டிருந்தன. மஞ்சளும் பச்சையும் கலந்தவெளிர் நிறபிளவுஸ் அதில் சற்று மஞ்சள் நிறம்கூடிய பூக்கள் என்னை மெய்மறக்கச் செய்தன. அதிகம் நீளமில்லாதிருந்த பின்னப்பட்ட கூந்தலின் அடியில் மஞ்சள் நிறத்துணியால் கட்டப்பட்ட அழகிய குஞ்சம். அன்றே எனது மனதில் ஆசைத் தீ மூண்டுவிட்டது. பின் கொழுந்து விட்டெரியும் வேளைகளில் உம்மைப் பற்றிய வர்ணனைக் கடிதங்கள் எழுதுவேன். என்னை எவ்வளவு தூரம் வெறுத்து ஒதிக்கினீர். ஏசினீர் பேசினீர். அடிக்காத குறை சில சமயம் நேரில் சந்தித்திருந்தால் செருப்பால் கூட அடித்திருப்பீரோ? என்னவோ, உம்மீது காதல் உதயமானபின் உமது செயல்களெல்லாம் என்னைத் தீவிரப்படுத்தினவே தவிர குறை நினைக்கவிடவில்லை. நீர் என்னை ஆவேசமாக எதிர்க்கின்ற பொழுது நான் உம்மை அடைந்தே தீருவது என்று திடசங்கற்பம் பூண்டு கொண்டேன். மறைக்கப்பட்ட இடத்தை பார்க்கத்தான் கண்கள் விரும்பும். அந்த வகையில் உமது தீவிரமான எதிர்ப்பு உம்மீது எனக்கு அன்பைச் சொரிய வைத்தது. அதனால் தான் தீவிரமானேன்.

நான் ஏற்கனவே திருமணம் செய்வதானால் உம்மைதான் செய்வது என்று தீர்மானித்து விட்டேன். அதன் பின் உமக்கு எந்தக்குறை இருந்தாலும் எனக்கு பெரிதாக தென்படாது. தென்படவில்லை. ஒரு பெண் அதுவும் தமிழ்ப் பெண் தான் கெட்ட வரலாற்றை துணிந்து எழுதமாட்டாள். எனவே நீர் எழுதிய கடிதத்தை நான் நம்பவில்லை. அத்துடன் ஊரில் எனக்கு நண்பர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களிடம் நான் உம்மைப் பற்றி விசாரித்த போது ஒழுக்கக்கேடாக அவர்கள் எதுவும் சொல்லவில்லை. ஒவ்வொரு தொடர்புக்கும் ஒரு மூலம் இருக்கிறது. எமக்கு நல்ல பெற்றோர்கள், சகோதரர்கள், நண்பர்கள், மேலதிகாரி, மனைவி போன்றோர் கிடைக்கவும் ஒரு தொடர்பு இருக்கும். அது சென்ற ஜென்மத்தின் தொடர்ச்சியாகவும் இருக்கலாம். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பார்கள். இன்னார்க்கு இன்னார் என்று எழுதிவைப்பதற்கு எம்மை மிஞ்சிய ஒருவன் இருக்கிறான். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாக எமது மதம் கூறுகிறது. எனவே அந்த மூலம், தொடர்பு, அமைப்புத்தான் எம்மைச் சந்திக்க வைத்து மனங்கவரச் செய்து காதலை ஊட்டி சேர்த்து

வைத்திருக்கிறது. உள்ளது வரும் இல்லாதது வராது என்று தத்துவம் ஒன்றுள்ளது. உமக்குத் தெரியுமா? எமது சமூகத்தைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் காதலிக்க ஆசை, ஆனால் கல்யாணம் செய்ய விருப்பமில்லை. காதலிப்பவர்களில் பெரும்பான்மையானோர் கல்யாணம் என்று வந்ததும் பெற்றோர் மீது பொறுப்பைச் சுமத்தி விட்டு விலகி விடுகிறார்கள் எல்லோரும் அப்படியல்ல.

எனது நண்பன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு பெண்ணை மிகத் தீவிரமாக காதலித்தான். பெற்றோர் சீதனம் தரும்படி வற்புறுத்தினார். பெண்ணிடம் சீதனமில்லை. ஆனால் அவனால் காதலியை மறக்கமுடியவில்லை. அதனால் தன்னுடைய சம்பாதிப்பில் இருந்து பெற்றோர் கேட்ட பணத்தைக் கொடுத்தான். பெற்றோருக்குச் சரியான மகிழ்ச்சி. மணமேடையில் அவன் கொடுத்த பணத்தைத் தமது மருமகளிடம் பெருமையுடன் கொடுத்தனர். பல பெற்றோர்க்குத் தனது மகனுக்கு ஏராளமான சீதனம் வாங்குவதில் பெருமை இருக்கிறது. ஆனால் அது அவமானம் என்பதை அவர்கள் ஏனோ புரிந்து கொள்வதில்லை.

அன்பே, எம்முளப் பாசம் உருவாகிவிட்டது. உம்மைச் சந்தித்து ஒரு நிமிடம் கதைக்க ஆசைப்படுகிறேன். சம்மதிப்பீரா? உமது விருப்பம் தான் எனது விருப்பம். நீர் விரும்பாத எதையும் நான் செய்யவிரும்பவில்லை. விரும்பினால் எழுதவும்.

**பாசமுள்ள,**

**கரன்.**

# 11

**அன்பான கரனுக்கு,**

உங்கள் கடிதங்கள் ஒவ்வொன்றும் காலத்தால் அழியாத காவியங்களைப் போல் என்னுயிரில் கலந்து நிற்கும். உங்களைப் பற்றி நினைத்தால் மனம் இனிக்கிறது. இரவிலும் பகலிலும் உறக்கத்திலும் விழிப்பிலும் உங்களையே நினைத்திருப்பதால் எந்நேரமும் என்மனம் இனித்துக் கொண்டே இருக்கிறது. காதலுக்கு இவ்வளவு இனிமை இருக்கிறது என்று இப்பொழுது தான் எனக்குப்புரிய ஆரம்பித்துள்ளது. அதை நீங்கள் தான் புரியவைத்திருக்கிறீர்கள்.

உங்கள் நண்பனைப் போன்ற மனஇயல்புடையவர்கள் பலர் இன்றும் இப்பூமியில் வாழ்கிறார்கள். எனது பெற்றோரும் காதல்வயப்பட்டுத்தான் திருமணம் செய்தவர்கள். அவர்கள் இறக்கும் வரை அவர்களிடையே இருந்த அந்நியோன்னியம், புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும்

தன்மை, ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்யும் மனப்பாங்கு அவற்றை வார்த்தைகளால் எழுதமுடியாது.

எந்த ஒரு நாளாவது அம்மா, அப்பா சாப்பிடாது சாப்பிட்டது கிடையாது. வேலை நிமிர்த்தம் தூர இடங்களுக்குச் செல்லும் அப்பா எப்பாடுபட்டாவது சாப்பாட்டு நேரத்திற்கு வந்துவிடுவார். அனேகமாகச் சாப்பாட்டு விசயத்திற்காகத்தான் இருவருக்கிடையேயும் தகராறு வரும். நீர் சாப்பிட்டிருக்கலாம். இந்த சாப்பாட்டிற்காக மோட்டார்சைக்கிளுக்கு நூறு ரூபாய்க்கு பெற்றோல் அடித்து வந்தனான். கடையில் இருபத்தைந்து ரூபாவுடன் சாப்பிட்டிருக்கலாம் என்பார் அப்பா.

அதற்கு அம்மா சொல்வா, டொக்ரர் உங்களுக்கு என்ன சொன்னவா?. கடையில சாப்பிட வேண்டாமென்று ஏற்கனவே அல்சர் கடையில் சாப்பிட்டால் எப்படியிருக்கும்? என்பா அம்மா. குடும்பமாக ஒன்றாக இருந்து உண்பதில் எவ்வளவு இன்பம் இருக்குத் தெரியுமா? காத்திருப்பதிலும் ஓர் இன்பம் இருக்குது. கடமை இருக்கு, அன்பு இருக்கு, ஊடல் இருக்கு.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாகவும் மேலே ஒருவன் இருந்து சேர்த்துவைப்பதாகவும் மூலம், அமைப்பு, தொடர்பு, விதி, இவையெல்லாம் இருப்பதாகவும் எழுதியிருந்தீர்கள். இவற்றையெல்லாம் நானும் நம்புகிறேன். அதனால் தான் போலும் நல்ல முறையில் அன்பாக வாழ்ந்த எனது பெற்றோர் ஒன்றாக இறந்தனர். ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டு நடைபெற்ற இடம்பெயர்வின் போது என்னையையும் தங்கையையும் தென்மராட்சிக்கு அனுப்பி வைத்துவிட்டு நிலைமையை ஆராய்ந்து வருவதாகக் கூறி வீட்டில் இருந்தனர். அதன்பின் இன்றுவரை நான் அவர்களைக் காணவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது. எப்போ இறந்தார்கள் என்றுகூட அறியமுடியாத பாவியாக நான் இருக்கிறேன். வாழ்க்கையில் ஏற்பட்ட கஷ்டங்கள், தங்கைக்கு நேர்ந்த அவலம் இவற்றை நினைக்க வாழ்க்கை எனக்கு வெறுத்துவிட்டது. இதனால் தான் உங்களுக்கு கண்டபடி கடிதம் எழுதநேர்ந்தது.

ஜனனி பாவம், எனது நல்ல சிநேகிதி. நீங்கள் அவளின் உதவியை நாடியதால் அவள் என்னைக் காணும் வேளைகளில் எல்லாம் உங்கள் புராணத்தைப் பாடினாள். அதனால் தான் நான் அவளை வெறுத்தேன். கண்டபடி ஏசினேன். அவள் அதைத் தவறாக புரிந்து கொண்டு எனது நட்பைத் துண்டித்தாள். என்னுடைய நிலையில் இருக்கும் எந்தவொரு பெண்ணும் அப்படித்தான் நடந்து கொள்வாள். தயவு செய்து எனது நிலையை அவளுக்கு எடுத்துக்கூறி என்னுடன் கதைக்கச் சொல்லுங்கள். அவளை நான் அளவுக்கதிகமாகத் திட்டிவிட்டேன். அதை நினைக்கக் கவலையாகவுள்ளது.

கடிதமெங்கும் ஏராளமான தத்துவங்களை விதைத்துள்ளீர்கள். ஏராளமாகப் புத்தகங்கள் வாசிக்கிறீர்கள் போலுள்ளது. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்கிறார்கள். வாசிப்பு மனிதனை முழுமையாக்கிறது. உலகத்தைப் புரியவைக்கிறது. புதுப்புது விசயங்களை அறியவைக்கிறது. எம்முள் உள்ள தீயசிந்தனைகளை அகற்றுகிறது. நீங்கள் நிறைய வாசித்ததால் தான் ஒரு புரிந்துணர்வுள்ள, மனிதம் முழுமை பெற்ற ஆடவனாக இருக்கிறீர்கள்.

கடைசியாக என்னைத் தனியச் சந்தித்து ஒரு நிமிடம் உரையாடலாமா? என்று கேட்டு எழுதியிருக்கிறீர்கள். உங்கள் பண்புகளில் கரைந்து என்நிலை இழந்து உங்களின் இதயத்துள் புகுந்து விட்டேன். இந்த நிலையில் ஒரு நிமிடமில்லை நாள் முழுவதும் கதைக்க நான் தயார்.

கதைக்க வேண்டும் என்று நானும் விரும்பினேன். வீதிகளில், தெருக்களில், கோயில்களில் உங்களைக் கண்டால் எனக்கு ஆத்திரம் தான் வரும். அதனால் வெறுப்புடன் திட்டுவேன். அவ்வேளைகளில் உங்கள் உருவத்தை ஒழுங்காகப் பார்ப்பதில்லை. உங்களைக் கண்டவுடன் வெறுப்போடு தலையைக் குனிந்து விடுவேன்.

எனக்கும் உங்களைப் பார்க்க ஆவலாக இருக்கிறது. சந்திப்பது தான் கஷ்டம். அடுத்த கடிதத்தில் எங்கே சந்திக்கலாம் என்பதைப் பற்றி எழுதுகிறேன் அல்லது ஜனனியிடம் சொல்லியனுப்புகிறேன். எனது மேலதிகாரிக்கு எனக்குப் பழைய இடத்திற்கு இடமாற்றம் தரும்படி கடிதம் எழுதியுள்ளேன். இப்பொழுது என்மனதில் உங்கள் நினைப்பு மட்டும் தான் இருக்கிறது. பழைய கடிதங்கள் யாவும் எரித்து விட்டேன். பல கடிதங்களை நான் வாசிக்கவில்லை. அவற்றின் பிரதிகள் இருந்தால் அனுப்பி வைக்கவும்.

**அன்பான,**

**க. யாழினி.**

**பின் குறிப்பு:- பவானி திரையரங்குக்கு சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக் காட்சிக்கு வரவும்.**

# 12

**அன்பான யாழினிக்கு,**

எப்பொழுது சனிக்கிழமை வரும் என்று ஆவலோடு காத்திருக்கிறேன். உம்மைச் சந்திக்கின்ற அ ந்த அபூர்வமான நாளை எதிர்பாத்திருக்கிறேன். ஒரு நிமிடம் கழிவது ஒரு நாட்க் கழிவது போல் உள்ளது. நான் அதை எழுதும் போதே பயந்து பயந்து தான் எழுதினேன். சில வேளைகளில் நீர் என்னைத் தவறாக புரிந்து கொள்வீரோ என்ற பயம் இரண்டு நாட்களாக இருந்தது. சில வேளையில் நான் எழுதியது பிடிக்காவிட்டால் பழைய நிலைக்கு நீர் திரும்பிவிடுவீரோ எனப்பயந்தேன். நல்ல வேளை பிள்ளையார் என்னைக் காப்பாற்றிவிட்டார்.

முன்பென்றால் இரவு வந்தால் கவலையும் நிம்மதியின்மையும் தவிப்பும் குழப்பமும் ஆட்கொண்டு என்னை சித்திரவதை செய்யும். உறக்கம் வராது நினைவுகளுடன் போராடிக் கொண்டிருப்பேன். அலுவலகத்திலும் ஒழுங்காக வேலைகளைச் செய்ய முடியாது திண்டாடுவேன்.

ஆனால் இப்பொழுது நிலைமை மாறியுள்ள போதும் உறக்கம் வருவதில்லை. நினைவுகளில் உல்லாசம் காண்கிறேன். விழித்திருக்கும் போதே கனவு காண்கிறேன். சினிமாவில் வரும் காதல் காட்சிகளை போல் ஆடிப்பாடுகிறேன். நேற்றுக்கூட என்நினைவுகளில் உலாவந்தீர்.

இது வரை காலமும் யாழினி எனக்கையொப்பமிட்ட நீர் பின் குறிப்பில் க.யா என எழுதியதைக் கண்டதும் சிலிர்துப்போனேன். உமது அன்புக்காக ஏங்கிய நான் எவ்வளவு துன்பப்பட்டேன் என்று உமக்குத் தெரியாது. இன்று நீர் எனது உடமையாக்கப்பட்டு விட்டதாகவே கருதுகிறேன். என்னை வெறுத்தொதுக்கிய ஒரு பெண் என்னைப் படம் பார்க்க வரும்படி எழுதியதை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அதிர்ச்சியினால் இதயம் வெடித்துவிடும் போலுள்ளது. ஆனால் இதயத்துக்குள் இருக்கும் நீர் என் இதயத்தை வெடிக்க விடமாட்டீர் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஒரு பெண்ணால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்கிறார்கள். அது உண்மை. ஒரு பெண்ணால் தான் ஒரு நல்ல குடும்பத்தை உருவாக்க முடியும். ஒரு பெண்ணானவள் ஆணுக்கு தாயாக, தாரமாக, சகோதரியாக, தோழியாக, தாதியாக, வேலைக்காரியாக இருந்து பணிபுரிகிறாள். ஓர் அறிஞர் கூறியிருக்கிறார். இருவராகப் பிறக்கின்ற ஓர் ஆணும் பெண்ணும் காதலின் மூலம் ஒருவராகிறார்கள். இன்று நாம் இரு வேறு இடங்களில் இருந்தாலும் நினைவுகளால் ஓர் இடத்தில் இருப்பது போலவும், இரு உடலாக இருந்த போதும் ஓர் உடலாகி விட்ட நிலையில் இருப்பதாகவும் நான் உணர்கிறேன்.

முன்பு நீர் என்னை கண்ட போதெல்லாம் வெறுத்து ஒதுக்குவதாகவும், ஆத்திரத்துடன் தலையைக் குனிந்து கொள்வதாகவும் எனது முகத்தைப் பார்ப்பதில்லை என்றும் எழுதியிருந்தீர். நீர் என்னைப் பாராததால் நான் உம்மை முழுமையாகப் பார்ப்பேன். எனது அழகு தேவதையை ஆசை தீரப்பார்ப்பேன். உமது கடிதம் கிடைத்ததும் ஜனனியைச் சென்று சந்தித்து முழுவிபரமும் கூறினேன். அவள் திருப்திப்படவில்லை. நீங்கள் நன்றாக வாழ்ந்தால் சந்தோசம் என்று சொன்னாள். விரைவாக இடமாற்றம் பெற்றுக் கொண்டு வரவும். ஊரில் வேலை செய்தால் தினமும் காலை மாலை வேளைகளில் கண்டுகளிக்கலாம். நீர் சம்மதம் தெரிவித்த பின்பு உரிமையுடன் பாசத்துடன் காதலுடன் உம்மைப் பார்த்து ரசிக்க முடியவில்லையே என்ற வேதனை தான் என்னைவாட்டுகிறது. பொறுமையாக இருந்தால் பெரும்பலன் கிடைக்கும் என்பார்கள். நானும் சனிக்கிழமை வரை பொறுமையாக இருக்கிறேன். ஆவலோடு காத்திருக்கிறேன் ஏமாற்றாது வரவும். நீர் அணியும் ஆடைகளில் மண்ணிற ஸ்கேட்டும் பிளவுசும் தான் என் கண்ணை கொள்ளை கொண்டன. அந்த உடையில் காண்பதையே பாக்கியமாக கருதுகிறேன். தயவு செய்து எனது மனச்சாந்திக்காக மண்ணிறத்தென்றலாக வரவும். என்னை நீர் எந்நேரமும் நாணமில்லாமல் பார்ப்பதற்காக எனது படம் ஒன்றை இத்துடன் அனுப்பி வைக்கிறேன். எனது ஆசைக்காக உமது படம் ஒன்றையும் அனுப்பி வைக்கவும். என் கண்களுக்குள் இருக்கும் போது படம் எதற்கென்றும் கேட்பீர். கடவுள் எல்லா இடங்களிலும் நிறைந்திருந்தாலும் வரம் கேட்கவும் கண் குளிரக்காணவும் கோயிலுக்குத் தானே செல்ல வேண்டும். எனது உடலில் இடப்பக்கத்தில் இருக்கும் நினைவுகளோடு நிழற்படத்தையும்

வைத்திருக்க விரும்புகிறேன். இப்பொழுது நான் முற்றாக மாறிவிட்டதாக கூறுகிறார்கள். வீட்டில் அடிக்கடி சிரிக்கிறேனாம், வாய்க்குள் கதைக்கிறேனாம், உறக்கத்தில் புலம்புகிறேனாம். அம்மா குருக்களைக் கொண்டு பார்வை பார்த்து நூல்கட்ட வேண்டும் என்று அப்பாவுக்குக் கூற, அப்பா அவனுக்கு நூல் கட்டத் தேவையில்லை தாலி கட்டச் சொன்னால் எல்லாம் சரிவரும் என்றவராம். எனவே விரைவில் உமது வீட்டுக்கு வரவேண்டிய தேவை ஏற்படும். சனிக்கிழமை காலை ஏழு மணிக்கே பவானி திரயரங்க வாசலில் நிற்பேன்.

**உன்கனவுகளில் வாழும்**

**கரன்.**

பின் குறிப்பு:-**தயவு செய்து மண்ணிற உடையில் வரவும்.**

**யாழினி மணாளன்.**

# 13

**அன்பே! என் ஆருயிரே!!,**

சனிக்கிழமை என்னால் படத்திற்கு வரமுடியவில்லை. அப்படியான சூழ்நிலையில் அகப்பட்டுவிட்டேன். உங்கள் உள்ளத்தை கொள்ளை கொண்ட மண்ணிற ஸ்கேட்டையும் பிளவுசையும் வெள்ளிக்கிழமையே எடுத்து அழகாகத் துவைத்து அயன் பண்ணி வைத்திருந்தேன். உங்கள் மனங்கவர்ந்த மல்லிகை மொட்டுக்களை வெள்ளிக்கிழமை இரவே கோர்த்து மாலையாக தொடுத்து வைத்திருந்தேன். உங்கள் விருப்பப்படி அலங்காரம் செய்து உங்கள் முன் வரும்போது உங்கள் கண்களில், முகத்தில், உள்ளத்தில் ஏற்படும் மாற்றங்களை என் கண்குளிரப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டிருந்தேன். மறுநாள் உங்கள் மடலில் எனது உடையும் உருவமும் என் அழகும் பொலிவும் வர்ணனையாக வரும். அதை ஆசைதீர நுகரலாமென நினைத்திருந்தேன். ஆனால் அவையெல்லாம் பொய்த்துவிட்டன. கவலை தான் எனினும் எனது வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான நிகழ்வு ஒன்று திடீரென்று நிகழ்ந்துவிட்டது.

உங்கள் உள்ளம் அன்று எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும் என்று எனக்குத் தெரியும். விபரிக்கமுடியாத எண்ணற்ற கற்பனைகளுடன் உங்களுடன் சங்கமிக்கக் காத்திருந்த எனக்கு அந்நிகழ்வு பேரதிர்ச்சியாக இருந்தது. ஏதும் அறியாது இனிய நினைவுகளுடன் காத்திருந்த உங்களுக்கு எவ்வளவு ஏமாற்றமாக இருந்திருக்கும். மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்கு இருந்த மிகப்பெரிய சுமை முற்றாக நீங்கிவிட்டது. இனிஎமது வாழ்வுதான். கடவுள் என்ற ஒருத்தர் இருக்கிறார். அவர் காலம் அறிந்து எல்லாம் செய்வார் என்பார்கள். அது எவ்வளவு உண்மை என்பதை புரிந்துகொண்டேன். அத்துடன் காதல் புனிதமானது, தெய்வீகமானது. உண்மையான காதலைக் காலனால்தான் பிரிக்க முடியும். நீங்கள் காதலைப் பற்றி எழுதும் போது எனக்கு ஆத்திரம் தான் வரும். ஆனால் இன்று எங்கள் வீட்டில் நடந்ததைப் பார்க்கும் பொழுது காதலின்

சுகத்தைப் பற்றி அறிகிறேன். காதலுக்கு இவ்வளவு சக்தி இருக்கிறது என்று காதலித்தவர்களுக்குத்தான் தெரியும். அதை ஆயிரமாயிரம் வார்த்தைகளாலோ, அபூர்வமான காதல் கதைகளாலோ விளங்கப்படுத்த முடியாது என்பதை நான் அறிந்து கொண்டேன். முன்பு நான் உங்களுக்கு எனது தங்கையைப் பற்றி எழுதியது ஞாபகமிருக்கும். எனது தங்கையின் கணவனுக்கு தாய் மாமனின் மகளை நிச்சயம் செய்து கொழும்புக்கு அழைத்துச் சென்றுள்ளதாக எழுதினேன். கொழும்புக்குத் திருமணத்திற்காக வந்த தங்கையின் கணவன் ஒருவருக்கும் தெரியாமல் வெள்ளிக்கிழமை இரவு வீட்டுக்கு வந்துவிட்டார். தான் எனது தங்கையின் நினைவுகளோடுதானாம் வாழ்ந்தவர். தனது சகோதரனின் வீட்டில் இருந்தால் தன்னால் வீட்டில் இருக்கும் போது எம்மோடு தொடர்பு கொள்ளா முடியாமல் போய்விட்டதாம். அத்துடன் தனது நண்பன் ஒருவன் எனது தங்கை செல்பட்டு இறந்துவிட்டதாக ஊரில் இருந்து கடிதம் எழுதினவனாம். அதனால் அவள் இறந்துவிட்டதாக கருதியதாக அவர் சொன்னார். பின்தனது திருமணத்திற்காக கொழும்புக்கு வந்தபோது கடிதம் எழுதிய நண்பனைத் தான் சந்தித்துக் கதைத்தபோதுதானாம் உண்மை நிலை விளங்கியது. தனது பெற்றோர் அவனை வெளிநாட்டிற்கு அனுப்புவதாக ஆசைகாட்டியதால் தான் அப்படி எழுதியதாக கூறினானாம். நடந்த சம்பவம் எல்லாவற்றிற்கும் மன்னிப்புக் கோரினார். அதன் பின் எனது உறவினர்களை அழைத்துப் பிள்ளையார் கோயிலில் தாலிகட்டினோம். அடுத்தவாரம் இருவரும் கனடாவுக்குச் செல்வார்கள்.

அதனால்தான் நான் வரவில்லை. எனது குடும்பத்திற்கு உதவி செய்ய யார் இருக்கிறார்கள். நான் தான் ஓடித்திரிந்து யாவற்றையும் கவனித்தேன். என் உடல்தான் இங்கு பரபரத்தபடி ஓடித்திரிந்ததே தவிர உள்ளம் உங்களோடு கலந்துரையாடியது. உங்களுக்குத் தெரியாமலிருக்கும். சனிஇரவு முழுவதும் என்னை நித்திரை செய்யவிடாது என்னவோவெல்லாம் செய்தீர்கள். அதை என்னால் எழுதமுடியாது. கல்யாணத்தின் பின் நடப்பது கூட நடந்து முடிந்துவிட்டது. நீங்கள் பொல்லாத மனிதன். கனவிலேயே இப்படிச் செய்யும் நீங்கள் நிஜத்தில் என்ன செய்வீர்கள். என்னைக் காணாததால் எவ்வளவு கோபப்பட்டிருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். எதற்கும் அவசரமும் பதற்றமும்படும் உங்களுக்கு அன்று சரியான கோபமாய் இருந்திருக்கும். எனது இக்கடிதத்தை நெஞ்சில் வையுங்கள் இனிக்கும். உதட்டில் வையுங்கள் தித்திக்கும். கண்களில் வையுங்கள் குளிர்ந்து கோபத்தை போக்கும். மீண்டும் மன்னிப்புக் கேட்கும்

**உங்கள்**

**க. யாழினி.**

**பி.குறிப்பு:-நேரில் சந்திக்கும் போது இனிமையாக ஒன்று தருவேன் என்ன தெரியுமா? கனடா டொபி.**

# 14

**அன்பான யாழினி!**

வெளிநாட்டுக்குப் பயணம் செய்ய ஆயத்தப்படுத்துபவன் எவ்வளவு பரபரப்புடன் ஆயத்தப்படுவானோ அந்தளவு பரபரப்புடன் வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் இருந்தேன். எனது உடைகளைத் தெரிவு செய்வதில் கூட பெரும் பிரச்சினை இருந்தது. உமக்கு விரும்பிய உடை எதுவென்று எனக்குத் தெரியாது. அனேகமாக நீர் உடுத்தும் நிறங்களை உடைய உடைகள் எவையும் என்னிடம் இல்லை. அதனால் புதன்கிழமை கடைக்குச் சென்று மண்ணிறத்தில் லோங்ஸ் ஒன்று தைத்தேன். மண்ணிறக்கோடு போட்டசேட் ஒன்று எடுப்பதற்காக அனைத்து புடைவைக் கடைகளுக்கும் சென்றேன். வெள்ளிக்கிழமை இரவு முழுவதும் பரபரப்பால் உறங்கவில்லை. உறங்கினாலும் நீர் தட்டிஎழுப்பி விடுகிறீர். ஏன் உமக்குந்த வேலை. எனக்கு எவ்வளவு கோபம் வந்தது தெரியுமா? முதன் முதலாக பவானி திரையரங்குக்கு என்னைத்தேடி வரும் உம்மை எப்படி வரவேற்பது என்று மனதுக்குள் திட்டம் வகுத்து வரவேற்றுப் பார்த்தேன். பல்வேறு விதமாகத் திட்டமிட்டும் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. உம்மைக் கண்டதும் நான் என்ன செய்ய வேண்டும், நீர் என்னைக் கண்டதும் எப்படி இருப்பீர், என்றெல்லாம் கற்பனை பண்ணிப் பார்த்தேன். அலுவலகத்தில் நண்பர்களிடம் ஆலோசனை கேட்டுப்பார்த்தேன். அவர்கள் உருப்படியாக எதுவும் சொல்லவில்லை. ஒருவன் சொன்னான் தியேட்டருக்குச் சென்றதும் டிக்கற்றை எடுத்து வைத்திரு. உனது காதலி வந்த பின் டிக்கற் எடுப்பதனால் நேரம் சென்றுவிடும். நேரம் பொன்னானது நேரத்தைப் பிரயோசனம் உள்ளதாகக் கழி. வரும் போது ஒரு கவர்ச்சியான சிரிப்பு, பின் தியேட்டருக்குள் சென்று நெருக்கமாக அமர்ந்திரு. லைற் அணைந்ததும் கையைப்பிடி என்றெல்லாம் சொன்னான். எனக்கு அது திருப்தியளிக்கவில்லை. வாழ்க்கையில் முதன் முதலாகச் சந்திக்கும் போது பேசவே வராது. மௌனமாகத் தலைகுனிந்து கொண்டிருக்கும் உம்மை அருகில் இருந்து மிக நெருங்கியிருந்து பார்த்தாலே போதும். தற்செயலாக எனது கை அல்லது கால்பட்டாலும் உமக்குப் பிடிக்காது. அடிக்கவந்துவிட்டால் அன்றே பிரிவும் ஏற்பட்டுவிடும். அதை விட முதல் சந்திப்பில் கவனமாக கதைக்க வேண்டும் என நினைத்துக் கொண்டேன். ஒரு நிமிடங்கள் உம்மைச் சந்தித்து தனிமையில் கதைக்க வேண்டும் என நினைத்த எனக்கு மூன்று மணித்தியாலங்கள் அருகில் இருந்து கதைக்க அனுமதியளித்ததை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மனம் பூரிப்பால் நிறைந்திருந்த போதும் பரபரத்துக் கொண்டேயிருந்தது. அந்தத் துடிப்பை எப்படிச் சொல்வது?

கனவுகளைச் சுமந்து கொண்டு பவானி திரையரங்குக்குப் பன்னிரண்டு மணிக்கே சென்றுவிட்டேன். பரபரப்பால் காலையில் கூடச்சாப்பிடவில்லை. இரண்டு மணிவரை பொறுமையுடன் காத்திருந்தேன். என்விழிகள் ஆவலுடன் உமது வருகையை எதிர்பார்த்திருந்தன,

மண்ணிற பாவாடையுடன் வரும் பெண்களைக் கண்டு என்விழிகள் ஏமாந்தன. காத்திருப்பதிலும் ஒரு சுகம் இருந்தது. படம் தொடங்கியும் நீர் வராததால் உமக்கேதாவது வருத்தமோ என்றுதான் எண்ணினேன். நீர் எழுதியதைப் போல உம்மீது எனக்குக் கோபம் வரவில்லை. ஏக்கம் தான் வந்தது. கவலைதான் பெருகியது. எதையும் உடனேயே செய்துவிடவேண்டும் என்ற துடிப்புடன் வாழ்பவன் நான். என்னால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. மனதுள் திடட்மிட்டு செய்தவையெல்லாம் நிறைவேறாததால் உள்ளம் உடைந்துபோனது. பின்பு உமது கடிதம் கிடைத்த பின்பு தான் உண்மையான நிலை விளங்கியது. ஆனால் உமது எழுத்தை நினைக்க கவலைதான் வந்தது. உமக்கு யாரும் இல்லையென்று எழுதியிருந்தீர்.

ஏன் நான் எங்கே போய்விட்டேன்? உமக்காக நான் என்ன செய்யவேண்டும்? என்று சொல்லும் உடனேயே நான் செய்துவிடுவேன். அன்பே என் உயிர் உள்ளவரை உமக்குச் சேவகம் செய்வேன். இனிமேல் பகிடிக்காகக் கூட அப்படி எழுதவேண்டாம். காதலின் சக்தியை பற்றி எழுதியிருந்தீர். நீர் அறிந்து கொண்டதைவிட தெரிந்து கொண்டதைவிட சக்தியான விடயங்கள் பல இருக்கின்றன.

உமது தங்கையின் வாழ்வு மலர்ந்ததையிட்டு மிகவும் மகிழ்ந்தேன். கடவுள் இரக்கமுள்ளவர், பாசமுள்ளவர், பற்றுள்ளவர் எந்த வேளையிலும் துன்பம் நேரவிடமாட்டார். துன்பங்களை மனிதர்கள் தாமே தேடிக்கொள்கின்றனர்.

ஒவ்வொருவரினதும் விதியென்பது தமக்குத்தாமே செய்து கொள்வது. நன்மை செய்தால் நன்மை வரும். தீமை செய்பவன் நன்மையை எதிர்பார்க்க முடியாது. நல்ல விதைகளைப் விதைத்தால் உணவாகும் தானியங்களைப் பெறலாம். கள்ளியை நட்டால் உணவாக்கலாமா..? எப்போது சந்திப்போம்? எங்கே சந்திப்போம் என எழுதவும்.

**அன்பான கரன்.**

# 15

**அன்பான கரன்,**

உங்கள் மடல் கிடைத்தது. அன்று மிகவும் முக்கியமான நிகழ்வின் காரணமாகத் தான் நான் வரவில்லை. எனக்காக நீங்கள் இனிய நினைவுகளுடன் காத்திருந்து ஏமாந்ததை நினைக்க எனக்கு மிகவும் வருத்தமாக உள்ளது. என்ன செய்வது விரைவில் நான் உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்குவேன். எனது தங்கையின் கணவர் இன்னும் பத்து நாட்களுக்கு ஊரில் நிற்பார். அதன்பின் அவர் தங்கையைக் கூட்டிக்கொண்டு கனடாவுக்குச் சென்றுவிடுவார். ஒரு வாரத்திற்குள் இனத்தவர்களையும் நண்பர்களையும் அழைத்து கல்யாணச் சாப்பாடு கொடுக்கப் போவதாக எனது தங்கையின் கணவர் கூறியுள்ளார். எப்பொழுது விருந்து நடைபெறும் என்பதைத் தங்களுக்கு நான் அறியத்தருகிறேன். அன்று எங்கள் வீட்டிற்கு வரவும். எனது அலுவலகத்தில்

என்னோடு பணிபுரிபவர் என்று நான் எனது வீட்டுக்காரருக்கு சொல்கிறேன். பெரிய ஆட்டுக்கடா ஒன்றும் குடிவகைகளையும் வாங்கப்போவதாகச் சொல்கிறார்.

நான் குடிவகைகள் வைக்கவேண்டாம் என்று சொன்னேன். அதற்கு அவர் சிரிக்கிறார். தன்னை மனிதனாக வாழவைத்தது மதுபானம்தானாம். எனது தங்கையைத் தன்னால் மறக்க முடியவில்லையாம். குழந்தையுடன் அவள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள் என்று நினைத்தாராம். அத்துடன் அவள் இறந்ததாகக் கேள்விப்பட்டதையும் தன்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லையாம். அதற்கெல்லாம் மருந்தாக மதுபானம்தானாம் இருந்தது. நிறையக் குடித்துவிட்டால் கஷ்டங்கள் கவலைகள் தெரியாமல் தூங்கிவிடலாமாம். தனக்கு ஆறுதல் அளித்த மதுபானத்தைக் கௌரவிக்கத்தானாம் நண்பர்களுக்கு அதைக் கொடுக்கிறார். இனிமேல் அதைத் தொடமாட்டேன் என்று சத்தியம் செய்தார். நீங்கள் வீட்டுக்கு வந்தால் எனது கையாலேயே உணவு பரிமாறுவேன். ஆனால் நீங்கள் கடைசிவரையும் குடிக்கக்கூடாது. மது அருந்துவது மகாபாவம் மதுவே எல்லாக்குற்றச் செயல்களுக்கும் காரணகர்த்தா, மது அருந்துபவன் தமது குடும்பத்தை நேசிப்பதில்லை. குழந்தை குட்டிகளைக் கவனிப்பதில்லை. அயலவரை நேசிப்பதில்லை. தன்னைத்தானே அழித்துக் கொள்கிறான். எனக்கு மது அருந்துபவர்களைக் கண்டால் பிடிக்காது. ஜனனி ஒரு நாள் சொன்னாள் ஒழுக்கமாயிருந்த கரன் இப்போது குடிக்கிறான். ஏன் தெரியுமா உன்னுடைய கடிதஎழுத்தை மறப்பதற்காக நீ கிடைக்கமாட்டாய் என்பதால் பெருகும் துன்பத்தைக் குறைப்பதற்காக பாவமடி அவன் இரக்கப்படடீ என்றாள்.

நான் அவளுக்குச் சொன்னேன் நன்றாக குடிக்கச்சொல். குடிச்சு குடிச்சு ஈரல் கருகிச் செத்தால் எனக்குக் கரைச்சல் இராது. ஆனால் நீங்கள் குடிப்பதை இப்பொழுது வெறுக்கிறேன். என்னுயிர் போன்றவரை, என்னவரை ஊரவர் குடிகாரன் என்று சொல்வதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. நீங்கள் பாசமிக்க கணவனாக நேசம்மிக்க குடும்பத்தலைவனாக இருக்க வேண்டும் என்பது தான் எனது விருப்பம். இவ்வளவு காலமும் குடித்தீர்கள். அதற்குக் காரணம் நான் என்று ஜனனி சொன்னாள். இனிக் குடிக்காதீர்கள். அதற்கும் நான்தான் காரணம் என்று ஜனனி சொல்ல வேண்டும். நீங்கள் எழுதியதைப் போல நான் உம்மையே மனைவியென்று தீர்மானித்துவிட்டேன். நீர் எப்படி நடந்தாலும் கவலைப்படமாட்டேன் என்றீர்கள். அதே போல் நான் உங்களையே கணவன் என ஏற்றுக் கொண்டு விட்டேன். தயவு செய்து இனிமேல் குடியாதீர்கள்.

உங்களுக்கு மண்ணிற உடை பிடித்ததைப்போல் எனக்கு நீலச்சேட்டு கறுப்பு லோங்சும் தான் விருப்பம். ஜனனியினுடைய அக்காவின் திருமணத்தன்று அணிந்த அந்தநீலச் சேட்டுடனும் கறுப்புலோங்சுடனும் வாருங்கள். அந்த உடையின் அழகை என்னால் வர்ணிக்க முடியவில்லை. அத்துடன் தாடியை வழியுங்கள். பார்க்கப் பரதேசி போல் இருக்கிறது. தலைமயிரும் அளவுக்கதிகமாக வளர்ந்திருக்கு. எவ்வளவு அழகான ஆண்பிள்ளை தாடிமீசையுடன் பார்க்க அசிங்கமாக இருக்கு. எனது வீட்டுக்கு வரும் போது மாப்பிள்ளை போல வாருங்கள். அன்று நான் உங்களுக்குப் பிடித்தமான மண்ணிற ஸ்கேட்டும் பிளசும் அணிந்து வரவேற்பேன். சோடியாக வீடியோவும் பிடிக்கலாம். கணேஷ் அண்ணையிடம் சொல்லிப் படம் ஒன்று பிடிப்போம். தங்கையும்

கணவரும் தான் இப்பொழுது எமது குடும்பத்தின் பொறுப்பாளர்கள். அவர் என்னை இங்கே தனிய விட்டுவிட்டுப் போகப் பயப்படுகிறார்.

தன்னுடன் கனடாவிற்கு வரட்டாம். எனவே அவர் போகும் முன் உங்கள் அப்பா அம்மாவை அனுப்பி முறைப்படி பெண்கேளுங்கள். எப்பொழுது வீட்டுக்கு வந்து கேட்கலாம் என்று கேட்டீர்கள். நாளைக்கு வாருங்கள். சிலவேளை உங்கள் பெற்றோர் என்னைத் திருமணம் செய்ய மறுத்தால் என்ன செய்வீர்கள். உங்கள் பெற்றோர் சாத்திர சம்பிரதாயங்களில் நம்பிக்கையுள்ளவர்களென எழுதியிருந்தீர்கள். சிலவேளை குறிப்புப் பொருந்தாவிட்டால் என்ன செய்வது. எனது மனதில் ஆசையை வளர்த்து விட்டீர்கள். இனி என்னால் உங்களை மறக்கமுடியாது. என்னைத் திருமணம் செய்ய முடியாவிட்டால் சன்னியாசம் பூணுவேன் என்றீர்கள்.

நான் உங்களை அடையாவிட்டால் உலகை நீர்ப்பேன். பத்து நாட்களுக்கு வீட்டை விட்டு வெளியே வரமுடியாது. எனவே நீங்கள் நான் சொல்லும் போது வீட்டிற்கு வாருங்கள். கல்யாணம் முடிந்த பின் பவானி திரையரங்கிற்குச் செல்வோம். அதற்குள் அவசரமானால் தங்கையையும் என்னையும் பார்ப்பதற்கு வசதியான நேரம் வரவும்.

**பாசமுள்ள,**
**யாழினி.**

# 16

**அன்பான யாழினி,**

அன்று நீர்வராததைப் பற்றிக் கவலைப்பட்டது உண்மைதான். ஆனால் எமது காதலைவிடப் பெரும் பிரச்சினை ஒன்று வீட்டில் நிகழும் போது எப்படி உம்மால் வரமுடியும?. எமக்கு நல்ல காலம் என்றுதான் சொல்ல வேண்டும்.

உமது தங்கையின் பிரச்சினை தீர்ந்தது. உமது தங்கைவாழா வெட்டியாக வீட்டில் இருந்து பெருமூச்சுவிடும் போது நாம் எப்படி இன்பத்தை அனுபவிக்க முடியும். எமது ஒவ்வொரு செயலுக்கும் கட்டுப்பாடு போடவேண்டிய நிலை நீங்கிவிட்டது. இனி உல்லாசம்தான்.

நாங்கள் படத்திற்கு அல்லது கோவிலுக்குப் புறப்படும்போது இளமைத்துடிப்புள்ள உமது தங்கையின் மனம் என்ன பாடுபடும் என்பது காதலிக்கும் போது கஷ்டப்பட்ட எனக்குத்தான் புரியும். நீரும் எந்நேரமும் தங்கையைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருப்பீர். அந்தக் கவலையுடன் என்னுடன் எப்படி இன்பமாகப் பொழுதைப் போக்க முடியும். ஒளித்திருந்து எப்படிப்பழகுவது கதவைப்பூட்டிவிட்டுக் கதைத்தாலும் உமது தங்கையின் மனம் அல்லற்படும். வெளியே தனிமையில் இருந்து கதைத்தாலும் மனம் பரபரக்கும். காதலிக்கும் போது தான் திருட்டு முத்தம் இனிக்கும் திருட்டுத்தனமாகச் சந்திப்பதில் திறில் இருக்கும்.

காதலித்த பின்பு அமைதியாக சுவைத்து அனுபவித்தால்தான் இன்பம் பெருகும். எனவே உமது தங்கை வாழ்வு பெற்று செல்வதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். தாம் சேர்ந்த மகிழ்ச்சியை உறவினர்கள் நண்பர்களுடன் கொண்டாடும் போது நானும் கட்டாயம் வருவேன் மறக்காது அறிவிக்கவும். அன்றைய தினம் குடிவகைகள் பரிமாறப்பட இருப்பதாகவும் என்னைக் குடிக்க வேண்டாம் என்றும் எழுதியிருந்தீர்.

நான் குடித்தது உண்மைதான் மறுக்கவில்லை. குடிக்க வேண்டிய நிலை உம்மால்தான் ஏற்பட்டது. நீர் என்னை வெறுத்தொதுக்கிய போது மது என்னை அரவணைத்துக் கொண்டது. இப்பொழுது நீர் என்னை அரவணைத்துக் கொண்டதால் மதுவை வெறுத்தொதுக்கி விட்டேன். என் வாழ்நாளில் மதுவைத்தொடமாட்டேன். உம்மை நினைத்தாலே போதை ஏறுகிறது. உமது கடிதத்தை வாசித்தால் மயக்கமே வருகிறது. இந்த நிலையில் உம்மைப் பார்த்தால் போதை தலைக்கேறிவிடும். அதன் பின் எதற்கு மது?.

மதுபானம் அருந்துவது உண்மையில் கெட்ட பழக்கம்தான். காசைக் கொடுத்து நோயை வாங்குவது. ஒரு முறை சொன்னால் அறிந்து கொள்பவனுக்குத்தான் புத்திமதி சொல்லலாம். உமது வார்த்தைகளை தேவவாக்காகக் கருதும் நான் நீர் சொன்னபடி உமது விருப்பத்திற்கு மாறாக மது அருந்தமாட்டேன். சத்தியம் என்பது உறுதியில்லாதவனின் வாய்மொழி என்று நான் கருதுவதால் சத்தியம் செய்யவில்லை.

உறுதியான உள்ளம் கொண்டவனுக்கு உயர்ந்தது, தாழ்ந்தது, எல்லையற்றது என எதுகும் இல்லை. அதனால் உம்மைவிட எதுகும் எனக்கு உயர்ந்ததல்ல. தாடியைப்பற்றியும் தலைமயிரைப்பற்றியும் எழுதியிருந்தீர்.

தற்போதைய இளைஞர்கள் தாடி வளர்ப்பதை ஒரு பெஷனாகக் கொண்டமையால் எனக்கும் அந்த ஆசை வந்தது.

அலுவலகத்திலுள்ள நண்பர்கள் எனக்குத்தாடி அழகாக இருக்கிறது என்று கூறியுள்ளமையால் வளர்த்தேன். நண்பர்களைவிட நான் மனைவியைத்தான் அதிகமாக நேசிக்கிறேன். அவள் மூலமாகத்தான் தோழமையையும் புகழையும் அடைய முடியும். மனைவியால்தான் இல்லம் உயர்வடைகிறது. நான் காதலித்தபின் புதான் வள்ளுவனது இல்வாழ்க்கை தொடர்பான குறல்களைப் படித்தேன். மனைவியைப் பற்றியும், அவளது மனஇயல்புகளைப் பற்றியும் அவர் கூறிய கருத்துக்களை உம்மோடு இணைத்துப் பார்த்து இன்பமடைவேன். உமது விருப்பத்திற்கு மாறாக நான் ஒரு போதும் நடக்கமாட்டேன். எனவே உமது கடிதம் கிடைத்தவுடனேயே சலூனுக்குச் சென்று தாடியை மழிக்கும்படி கேட்டேன்.

நாவிதன் விருப்பப்படவில்லை. இந்த ஊரில் தாடி வளர்க்கும் இளைஞர்களில் உமது தாடிதான் கவர்ச்சியானது. அதை வழிக்க எனக்கு மனம் வரவில்லை என்று கவலைப்பட்டார். நான் பிடிவாதமாக மழித்து விட்டேன். பல நாட்களாக எனக்கு உமது படத்தைக் கேட்க ஆசை. எனது படத்தை அனுப்பும் போது சாடையாகக் கேட்டும் நீர் தரவில்லை.

எனது பெற்றோர் சாத்திர சம்பிரதாயங்கள் பார்ப்பவர்கள்தான். விதியென்று ஒன்று சாத்திரசம்பிரதாயங்களுக்கு அப்பால் இருக்கிறது என்பது உமக்குப்புரியாதா? வானத்தின் உச்சியில் பறக்கும் பருந்துக்கு நிலத்தில் மேயும் கோழிக்குஞ்சைத் தெரியும். ஆனால் அதே பறவைக்குக் காலம் வந்து விட்டால் தனக்கருகில் விரிக்கப்பட்ட வலை தெரியாது. அதேபோல எனக்கு நீரும் உமக்கு நானும் என்று தீர்மானித்துவிட்டோம்.

இனி எம்மை யாராலும் பிரிக்க முடியாது. அம்மாவுக்கு எனது திருமணம் பற்றி கூறியிருக்கிறேன். வாழ்க்கை புரிந்து கொள்பவர்களோடு இணைந்தால் தான் சிறக்கும் வாழ்க்கைக்கு பணம் தேவையில்லை. நிறைவான மனமுடையவன் எல்லாச் செல்வங்களையும் அடைவான்.

என்று அம்மாவுக்குச் சொல்லியுள்ளேன். அம்மாவுக்கு என்னில் ஒரு சந்தேகம் இருக்கு. முழுவதையும் ஒரு நாளில் சொல்ல முடியாதல்லவா? படிப்படியாகச் சொல்வேன். காதல்கனிந்து வாழ்க்கை நிறைவு பெற்ற நிலையில் உயிர்விடுவேன் என்று கூறுவது எந்த வகையில் பொருந்தும்? கற்பனையை விட்டு விட்டு நிஜ உலகிற்கு வரவும்.

**அன்புடன்**

**கரன்.**

# 17

**அன்பான யாழினி,**

ஓர் அபூர்வமான அரிய இனிய சந்திப்பொன்று நேற்று முன்தினம் நடந்தது. அதற்காகக் கடவுளுக்கு நான் நன்றி சொன்னேன். ஓரிரு தரமல்ல ஆயிரம் தரம் சொன்னேன்.

உமது தங்கையின் கணவர் தமது இனத்தவர்கள் நண்பர்களுக்காக உணவு கொடுக்கும் நாள்வரை என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஏற்கனவே நீர் எழுதியிருந்தீர் பத்து பதினைந்து நாட்களுக்கு என்னால் வெளிக்கிட முடியாது. விரும்பினால் எனது தங்கையையும் கணவரையும் பார்க்க வரவும் என்று. உமது வீட்டிற்கு வரவேண்டும் என்ற நினைப்பு மனதில் தோன்றி சதா அரித்துக் கொண்டே இருந்தது. முன்பென்றால் நான் வீதிகளில் பேயாய் அலைந்து திரிந்தால் வாரத்தில் ஒரு முறையாவது சந்திப்பேன். நீர் இடமாற்றம் பெற்றுச் சென்ற பின்பு ஏறக்குறைய ஒரு மாதகாலத்துள் ஒரு முறையாவது உம்மைத் தரிசிக்கும் பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லை. மனதில் தேங்கி நின்று உடலை வருத்தும் உணர்வுகளின் கோரம் உமக்கு எங்கேபுரியப்போகிறது. அதனால் தான் புறப்பட்டு வந்தேன். எனது வீட்டில் இருந்து தைரியமாகப் புறப்பட்ட நான் உமது வீட்டுப்படலைக்கு வந்த போது தைரியத்தை முற்றாக இழந்து விட்டேன். திரும்பிச் சென்று விடுவோமோ என்று நினைப்பதற்கு முன் உமது நாய்கள் என்னைக் கண்டு விட்டன. இரண்டு நாய்களும் ஆவேசத்துடன் கடித்துக்

குதறுவதற்காகப் பாய்ந்து வந்தன. நான் பயந்து விட்டேன். பயத்தினால் உடலும் கைகளும் நடுங்கி விட்டன. சைக்கிளில் இருந்து கையை விட்டேன். அது விழுந்த சத்தத்தில் நாய்கள் மிரண்டு ஓடிவிட்டன. சைக்கிளைத் தூக்குவதற்காகக் குனிந்த போது நாய்கள் தம்மைத் தாக்குவதற்காகக் கல் எடுக்கிறேன் என நினைத்து உள்ளே சென்று குரைத்தன. நாய்களுக்கு என்ன உணவு வைக்கிறீர்கள். மண்ணிற நாய் ஐம்பது கிலோ வரும். உம்மை மாதிரி மொழுமொழு என்றிருந்தது. நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வெளியே வந்த நீர் திகைத்துப் போய்நின்றீர். என்னைப் பார்க்கவோ வா என்று வரவேற்கவோ முடியாது தவித்ததை நான் கண்டேன். உயிருக்குயிராக நேசிக்கும் இருவர் முதன் முதலாக சந்தித்தால் எப்படி இருக்கும் என்பதை என்னால் அன்றுணர முடிந்தது. எனது கண்கள் அடிக்கடி உம்மையும் நிலத்தையும் பார்த்தன. சிரிக்க முடியாமல் உதடுகள் ஒட்டிக்கொண்டன. மிகவும் சிரமப்பட்டு நிமிடங்கள் கழிந்தன. வீதியில் நான் படலையடியில் நீர். இருவருக்கும் இடையில் பத்து யார் தான் இடைவெளி. பெண்ணான உம்மால் தான் பேசமுடியவில்லை என்றால் துணிவுள்ள ஆண்மகனான என்னாலும் பேசமுடியவில்லை. நாய்களும் என்னைப் பார்த்து ஆவேசமாகக் குரைத்துக் கொண்டு இருந்தன. அப்பொழுது நீர் நாய்களைப் பார்த்து வீரா, சூரா அவர் எனக்கு வேண்டியவரடா உள்ளே போ என்றவாறு என்னைப் பார்த்து அழகாக உதடுகள் பிரியாது மூன்றாம் பிறை போல் சிரித்தீர். அந்தச் சிரிப்பின் கவர்ச்சியால் நான் மயங்கிய போது உள்ளுக்கு வாருங்கோ..? என்றீர். அதன் பின்பும் என்னால் பேச முடியவில்லை. மௌனமாக வந்தேன். நான் வீட்டுக்கு அந்த நேரம் வருவேன் என நீர் எதிர்பார்க்காததால் உமது இயற்கையான உருவஎழிலைக் கண்டு ரசிக்கக் கூடியதாக இருந்தது. நீலப்பூப்போட்ட சட்டை, வாராது கொண்டையாகக் கட்டிய தலைமுடி, பௌடர் பூசாத முகம், பொட்டில்லாத நெற்றியில் அந்தத் தோற்றத்திலும் மிகவும் கவர்ச்சியாகத்தான் இருந்தீர். முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன்பு மாப்பிள்ளை பகுதியினர், பெண் பார்க்கப் பொம்பிள்ளையின் வீட்டுக்குத்தாம் வருவதை பற்றி அறிவிக்காமல் தான் செல்வார்களாம். அப்பொழுது விவசாயிகள் குடும்பம் தான் ஊரில் அதிகமாக இருக்கும். ஆடு, மாடுகள் விற்பனைக்கிருக்கும். அவற்றைப் பார்க்கும் சாட்டில் சென்று பெண்பிள்ளையைப் பார்ப்பார்களாம். மாப்பிள்ளையின் தகப்பனுடன் இனத்தவர்களும் சென்று பார்வையிடுவார்கள். பெண்ணைப் பிடித்தால் திருமணம் நடைபெறும். பிடிக்காவிட்டால் சென்றுவிடுவார்கள். பெண்ணுக்கோ வீட்டாருக்கோ மாப்பிள்ளைப் பகுதிக்கோ வந்து போன விசயம் தெரியாது. பழைய முறை எவ்வளவு நல்லதென்று பார்த்தீரா? இன்று பெண்களைக் கடைச்சரக்காக்கி விலை பேசும் அளவிற்கு நாகரிகம் வளர்ந்து விட்டது. நான் வீட்டிற்குள் வந்ததும் இருக்குமாறு கூறி உள்ளே சென்று விட்டீர். சுமார் பதினைந்து நிமிடங்கள் தனிமையில் இருந்து கற்பனை வானில் சிறகடித்துப் பறந்தேன். அலங்காரமில்லாத உமது உருவம் எனது மனத்திரையில் அழியாதிருந்தது.

பதினைந்து நிமிடங்களின் பின் அழகாக அலங்காரம் செய்து வந்தீர். பச்சைநிற ஸ்கேட்டும், அதற்கேற்ற பிளவுசும் மிகவும் அழகாக இருந்தது. மண்ணிற உடைதான் உமக்கு அழகென்று நான் நினைத்திருந்தேன், ஆனால் நீர் எந்த உடை அணிந்தாலும் அழகாகத்தான் இருக்கிறீர். உமது உருவமைப்பு, நிறம் என்பன எந்தஉடைக்கும் பொருந்துவதாக இருக்கின்றன.

நான் வந்த வேளை உமது தங்கையும் கணவரும் வெளியே சென்றுவிட்டதாகக் கூறினீர். அவர்களது பிள்ளைதான் உம்மோடு இருந்தது. நான் கொண்டு வந்த இனிப்புப் பொட்டலத்தை உமக்கு நீட்டிய போது அதை நீர் வாங்காது தங்கையின் மகளுக்குக் கொடுக்கச் சொன்னது ஒரு மாதிரியாக இருந்தது. முதன் முதலாக கணவன் என்று நிச்சயிக்கப்பட்டவன் கொடுத்த பொருளை நீர் வாங்கிப் பிள்ளைக்குக் கொடுத்திருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

நான் வீட்டில் இருந்த இரண்டு மணிநேரத்தின் பெரும் பகுதி மௌனமாகவே கழிந்தது. மனவருத்தமாக இருந்தது. நேரத்தை பொன்னாக மதித்தல் வேண்டும். ஒரு முறை கிடைத்த சந்தர்ப்பம் சூழ்நிலைகள் பின் கிடைக்கா என்று தெரிந்தும் மனதில் இருந்த ஒரு சக்தி என்னை ஊமையாக்கி விட்டது. மௌனமாக இருப்பதிலும் அமைதியான ஒரு சுகம் மனதில் இருந்தது. அது இப்பொழுதும் இனிக்கிறது. அந்த இனிமையுடன் இருக்கிறேன்.

**அன்பின்**

**கரன்.**

# 18

**அன்பிற்கினிய கரனுக்கு,**

அன்று நான் உங்களை எதிர்பார்த்திருக்கவில்லை. நாய் குரைத்தால் யாரோ வீட்டிற்கு வந்திருக்கிறார்கள் என்று நினைத்து யார் என அறிவதற்காக வெளியே வந்தேன். உங்களைக் கண்டதும் திகைத்துவிட்டேன். அதன்பின் என்னால் நீங்கள் எமது வீட்டில் இருந்து செல்லும் வரை இயல்பு நிலைக்குத்திரும்ப முடியவில்லை. மனதில் இனம்புரியாத உணர்வுகளின் தாக்கத்தினால் என்னை மறந்து ஒரு பொம்மையைப் போலத்தான் செயற்பட்டேன். இன்று நினைத்தாலும், நீங்கள் வந்த காட்சி நினைவுக்கு வருகிறதே தவிர சம்பவங்கள் நினைவுக்கு வருவதில்லை. உங்களை எதிரியாகக் கருதி கண்டபடிதிட்டி எழுதினவெல்லாம் உங்களைக் கண்டதும் நினைவுக்கு வந்தன. அமைதியான உங்களை அப்படியெல்லாம் எழுதியது எவ்வளவு பிழையென்று இப்போது உணர்கிறேன். அன்று தங்கையின் கணவர் தனது இனத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுக்க இருந்த விருந்துக்கான முன்னேற்பாடாக வீட்டின் தூசிகளைத் தட்டி வீட்டைக் கழுவுவதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருந்த போது தான் நீங்கள் வந்தீர்கள்.

வீட்டுடையில் அலங்கோலமாக உங்கள் முன் வரவே எனக்கு வெட்கமாக இருந்தது. இப்பொழுதெல்லாம் நினைவிலும், கனவிலும், நீங்களே என் மனதில் இருக்கிறீர்கள். ஏதோ மருந்து மாயம், வசியம் செய்து விட்டீர்கள் போல் தெரிகிறது. காணும் பொருட்களில் எல்லாம் உங்கள் உருவமே தெரிகிறது. எனது தங்கையின் மகளிடம் உங்களைப் பற்றிக் கேட்டேன். அழகான மாமா என்று சொன்னாள். அவள் மாமா இல்லை பெரியப்பா என்று சொல்ல வேண்டும் என்று மனம் துடித்தது. ஆனால் சொல்ல முடியவில்லை. பெற்றோர் வந்ததும் அவள் அழகான மாமா வந்தவர் என்று சொன்னாள். நான் அவர்களிடம் எனது ஒபிஸில் வேலை செய்யும் ஒருவர் உங்களைப் பார்க்க வந்ததாகக் கூறினேன்.

அடிக்கடி எனது உடையைப் பற்றி எழுதுகிறீர்கள். உடை சுத்தமானதாக இருக்க வேண்டும். அழகாக நல்ல முறையில் தைத்தால் எல்லோருக்கும் எல்லா உடையும் நன்றாக இருக்கும். உங்களுக்கு என் மீது உள்ள அளவு கடந்த பாசத்தால் எல்லாம் நன்றாகவும் அழகானதாகவும் கவர்ச்சியானதாகவும் தெரிகின்றன. மனதில் ஆசையை வைத்துக் கொண்டு பார்த்தால் எல்லாம் சிறந்தனவாகத் தான் இருக்கும்.

நீங்கள் சென்ற பின் நீங்கள் இருந்த அந்தக் கதிரையைத் தொட்டுப்பார்த்தேன். உங்கள் மீது தொடுவதைப் போன்றதொரு பரவசம் என் உடலெங்கும் சிலிர்த்து ஓடியது. அதில் இருந்து பார்த்தேன். என்னையே மறந்து விட்டேன். நீங்கள் என்னைக் கட்டியணைப்பதைப் போன்ற பிரமை ஏற்பட்டது. நீங்கள் தேனீர் குடித்து விட்டு வைத்த டம்ளரை எடுத்து எனது உதடுகளுக்கிடையே வைத்தேன். இனித்தது. இனிமேல் என்னால் தனிமையாக இருக்க முடியாது. கட்டாயம் நீங்கள் என்னருகில் இருக்க வேண்டும். உங்கள் நினைவுகளில் கரைந்துள்ள எனக்கு ஆறுதல் அளிக்க நீங்கள் வரவேண்டும். எனவே விரைவில் திருமணநாளைக்குறியுங்கள். தங்கை போகுமுன்பு வந்து கதைத்தீர்களானால் நல்லது. அம்மாவுக்குச் சொல்லி விட்டதாக சொன்னீர்கள். அவர்களைப் பார்க்க ஆசையாக உள்ளேன். விரைவாக அனுப்பி வைக்கவும்.

நீங்கள் கொண்டு வந்து தந்த இனிப்புப் பொதியை நான் வாங்கவில்லை என்று கோபமா? என்னால் உங்களை நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை. எதிரியாகக் கருதிய ஒருவர் அன்புக்குரியவராக வந்த போது என்னால் பேசமுடியவில்லை. இவ்வளவு நாட்களும் கடிதமே எமது தூதுவர்களாக, பிரதிநிதியாக இருந்து செயற்பட்டது. ஒரு நாளாவது கதைத்துப் பேசாதவர் முன் கடிதங்களில் வெட்கமில்லாமல் வர்ணனைகளை எழுதிவிட்டு அதை நினைத்து நாணப்படும் நான் எப்படிக் கதைக்க முடியும். துணிவுள்ள ஆண்பிள்ளை, தைரியமான ஆண்மகன் என்னுடன் கதைத்திருக்கலாம்தானே. பிடித்துவைத்த பிள்ளையார் போல இருந்து விட்டுக் கடிதத்திலா வீரம் காட்டுகிறீர்கள். உங்களின் துணிவு வீரம் வீராப்பு யாவும் போலியானவை என்பது அன்றுதான் புரிந்து கொண்டேன். கடிதத்தில் எழுதிய வர்ணனைகளில் ஒன்றையாவது எடுத்து விட்டிருக்கலாம், பரவாயில்லை. அடுத்த முறைவரும் போது ஏதாவது திட்டமிட்டுக் கொண்டுவாருங்கள்.

வருகிற புதன்கிழமை, இருபதாம் திகதி தங்கையின் திருமண வைபவத்தைக் கொண்டாடுவதாகத் திட்டமிட்டுள்ளோம். அன்று காலை ஒன்பது மணிக்கு முன் வரவும். உங்களுக்குக் காலைச்சாப்பாடும் எங்கள் வீட்டில்தான். காலை உணவை நானே தயாரித்து

பரிமாற உத்தேசித்துள்ளேன். கன்டோஸ் டொபி வாங்கிவரவும். நானே உங்களிடமிருந்து வாங்கி கடித்துவிட்டு மீதியை உங்களுக்குத் தருகிறேன்.

வேலைகள் காரணமாக உங்களுக்குக் கடிதம் எழுத முடியவில்லை. தொடர்ந்து இருந்து எழுதினால் தங்கச்சி என்னவென்று கேட்கிறாள். அவளுக்கு என்மீது லேசான சந்தேகம் இருக்கு. என்னக்கா எந்நேரமும் யோசிச்சுக் கொண்டிருக்கிறாய். தன்பாட்டில் கதைக்கிறாய். அவள் அனுபவப்பட்டவள் புரியும் தானே. நான் சமாளிப்பேன். எனினும் அவளுக்குச் சந்தேகம் இருக்கு. சொல்லலாம். காதலைப் பற்றி அவளோடு கேவலமாகக் கதைத்துவிட்டு நான் காதலிப்பதைக்கூற ஒரு மாதிரி இருக்கு.

**அன்பான யாழினி!**

# 19

**அன்பான யாழினி,**

பௌர்ணமி இரவு. வானத்தில் ஒளிப்பந்து போல் பூரண நிலவு பவனி வந்து கொண்டிருந்தது. பட்டொளி மரம், செடி, கொடிகளிலெல்லாம் பூசப்பட்டு பளபளத்துக் கொண்டிருந்த வேளை மெல்லிய குளிர்ந்த தென்றற் காற்று மரங்களைச் சலசலக்க வைத்து எம்மீது வருடியது. முற்றத்து வெண்மணற் பரப்பில் அழகான அந்த மண்ணிறப்பாவாடை சட்டையுடன் நீர் அமர்ந்திருக்கிறீர். அழகாக வாரிவிடப்பட்ட உமது தலையின் பிற்பகுதியில் அணியப்பட்ட வெள்ளிக்கிளிப்புகள் நிலவின் ஒளியில் பளபளக்கின்றன. தலையில் பிற்பகுதியில் தளர்வாக இருந்த தலைமுடிக்கற்றையின் மேல் மல்லிகைச் சரம் சூடியிருந்தீர். அதன் நறுமணம் தென்றலோடு கலந்து சுவாசத்துடன் புகுந்து தலையைக் கிறுகிறுக்க வைத்தது. வெண்மணல் பரப்பில் அமர்ந்திருந்து வேப்பமரத்தோடு சாய்ந்திருந்து அழகியகால்களை நீட்டியிருந்தீர்.

மெதுவாக உமக்குத் தெரியாமல் வந்து நான் உமக்கு அருகில், மிகமிக அருகில் அமர்ந்து உமது முகத்தைப் பார்த்தேன். குளிர்மையான அந்த இரவு நேரத்தென்றலின் வருடலிலும் உமது முகத்தில் வியர்வை அரும்பியிருந்தது. அழகான கருவிழிகள் சற்று மிரண்டு அச்சத்தால் படபடக்க, உதடுகள் மெல்ல விரிந்தன.

அருகில் மிக அருகில் அசைந்து வந்து கையைப்பிடித்த போது நீர் என்னை நிமிர்ந்து பார்த்தீர். உதடுகள் லேசாகப் பிரிந்து எதையோ சொல்லப்போவது போலத் துடித்தன. மெதுமையான சிவந்த உதடுகளின் அசைவு நிலவொளியிலும் துல்லியமாகத் தெரிந்தது. வானில்

மறைந்து அழுத நட்சத்திரங்கள் எனது கண்களுக்குள் பிரகாசித்தன. பிறப்பெடுத்ததன்பயன் அந்த நேரம் தான் புரிந்தது. மெதுவாக உம்மை அணைத்தேன். யாரோ தட்டுவது போல் இருந்தது. திடுக்கிட்டு விழித்தேன். அம்மா அருகில் நின்றா. 'என்ன புலம்புகிறாய்' என்று சிரித்தா. எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. இரவு முழுவதும் உமது நினைவுகளால் தூக்கமின்றி அல்லற்பட்ட நான் நேற்றுப் பகல் தூங்கிவிட்டேன். தூக்கத்தில் அருமையான கனவு உம்மை அணைத்து முத்தமிடமுன் அம்மா குழப்பிவிட்டா. நிஜத்தில் நடவாத ஒன்று கனவில் நடப்பதற்கு கூட விடுகிறார்கள் இல்லை என்பதை நினைக்கத் துக்கமாக உள்ளது.

எமது திருமணத்திற்காக உமது சகோதரியின் கணவன் கனடாவிற்கச் செல்லாமல் நிற்பதை நினைக்க ஆச்சரியமாகவுள்ளது. மிகவும் நல்ல குடும்பப் பொறுப்புள்ள ஒருவரை கணவனாக அடைய உமது சகோதரி கொடுத்து வைத்திருத்தல் வேண்டும்.

அவரோடு நான் கதைத்த போது அருமையான விசயங்கள் பலவற்றைச் சொன்னார். மாசில்லாத காதலும் அறமும் தான் நாம் பிறவிகள் எடுக்கும் போது தொடர்ந்து எம்மோடு வருகின்றன. காதலியை கைவிட்டால் அந்தப்பழி எம்பிறப்போடு கூடவந்து பழிவாங்கும்.

காதலியைக் கைப்பிடித்தால் வாழ்நாள் முழுவதும் எம்மைக் காப்பாற்றுவாள் என்றார் உமது மைத்துனர். ஆனால் உலகிலுள்ள அத்தனையும் அழிந்து போகும் போது மனிதனுக்கு நிலையாக நின்று ஆறுதல் அழிப்பது அன்பு ஒன்றுதான்.

அந்த அன்பை அன்பான காதலியால் தான் ஒருவருக்குக் கொடுக்க முடியும். தாயானவள் இடையில் நம்மை விட்டு விட்டு சென்றுவிடுகிறாள். அந்த இடைவெளியை நிரப்புவது காதலியின் அன்புதான் என்றார். அவரின் கதையைக் கேட்க மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. என்னையும் கனடாவுக்கு வரும்படி கேட்டார். தான் அங்கு சகல சுகபோகங்களுடனும் வாழ்வதாகவும் தனது மனைவி அங்கு தனிமையாகவும், உமது மனைவி இங்கு தனிமையாகவும் இருப்பதைவிட நீங்கள் அங்கு வந்தால் சேர்ந்து மகிழ்வாக வாழலாம் என்றார். மனிதர்களுக்கு அதிஷ்டம் வந்தால் இங்கேயே நாம் மகிழ்ச்சியாக வாழலாம். மகிழ்ச்சி என்பது மனதைப் பொறுத்தது. நிறைவான திருப்தியான மனமுண்டானால் குடிசையும் கோபுரமாக இருக்கும். மாடமாளிகைகளில் வாழ்பவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியாகவா வாழ்கின்றார்கள்? வெளித்தோற்றத்திற்கு பெரிய மாளிகையாக இருக்கும் ஆனால் உள்ளே வசிப்பவர்கள் பல்வேறு துன்பங்களால் வேதனைப்படுவார்கள். ஏராளமான சீதனத்தைக் கொடுத்து டொக்ரரைக்கட்டிய பெண்ணொருத்தி தன் கணவன் தன்னுடன் இருந்து மகிழ்வாகக் கதைப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை என்று சொல்கிறாள். வெளிநாடுகளில் பணத்தில் புரளும் நம்மவர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களை ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே சந்தித்துக் கொள்கிறார்களாம். இது நமக்குத் தேவையா? தினமும் காலையும், மாலையும், இரவும் உம்மருகில் இருந்து பேசிச்சிரித்து கூடிக்குலாவுவதில் உள்ள இன்பம் வெளிநாட்டில் வருமா? இதை நான் சொன்ன போது உமது மைத்துனர் சொன்னார், "சந்தர்ப்பம் ஒரு முறை தான் வரும். மறுபடியும் அவன் காரியம் செய்ய விரும்பும் போது அந்தச் சந்தர்ப்பத்தை அடைய முடியாது கடவுளிடம் கெஞ்சிக் கேட்டாலும் கிடைக்காது" என்றார்.

இயலாதவனுக்குச் சந்தர்ப்பம் சூழ்நிலைகள் ஒருமுறை தான் வரும் புத்தியுள்ளவன் தனது தேவைக்கேற்பச் சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்கிறான். வாழ்க்கையில் முன்னேறிய பலர் சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கியவர்களே.

ஆரம்பத்தில் நீர் என்னை எவ்வாறு நினைத்திருந்தீர். ஒருநாளா இரண்டுநாளா இரண்டு மூன்று வருடங்கள் என்னை எதிரியாக நினைத்திருந்தீர். எனது பொறுமையும் காத்திருப்பும் பெரியதொரு வெற்றிக்கு வழிவகுத்து உம்மையடைய வைத்தது. நல்ல மழை பெய்தால் அறுவடை அதிகரிப்பது போல் நல்ல திட்டங்களை வைத்திருந்தால் வாழ்க்கையில் முன்னேறலாம் என்று அவருக்குச் சொன்னேன். வெளிநாடுகளில் பணம் தேடச்செல்வோர் நிம்மதியாகவா இருக்கிறார்கள் அல்லது வாழ்க்கையில் பணமா இன்பத்தைக் கொடுக்கிறது. மரணம் என்பது பிறப்பின் போதே நிச்சயிக்கப்படுவது. மரணத்திற்கு அஞ்சி நாம் எங்கு சென்றாலும் நிழலைப் போல் அதுவும் தொடர்ந்து வரும். வெளிநாட்டில் வாழ்வோர் மரணத்தை வென்றுள்ளார்களா? அல்லது அங்கு போர் நடக்கவில்லையா? புதிய வகை மருந்துகளைக் கண்டுபிடிக்கும் பூமிகளில்தான் புதுப்புது நோய்கள் தோன்றுகின்றன. கனவில் தொடங்கிய கடிதம் தத்துவத்தில் முடிவடைகிறது. இவையெல்லாம் உமக்குப் பிடிக்குமோ தெரியாது. பிடித்துக் கொண்டால் ஏற்றுக்கொள்ளவும் பிடிக்காவிட்டால் வெறுக்காதிருக்கவும். உமது தங்கைக்கும் மைத்துனருக்கும் எனது நிலையை எடுத்துச் சொல்லவும். அவர்கள் தம்முடன் எம்மையும் அழைத்துச் செல்ல விரும்புகிறார்கள். என்னைப் பெற்றுக் கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கிய பெற்றோரைத் தவிக்க விட்டுப் பணம் தேடிச்செல்ல எனக்கு விருப்பமில்லை. எனது விருப்பத்தை ஆதரிப்பீர் என்று நினைக்கிறேன்.

**அன்புடன்,**

**கரன்.**

# 20

**அன்பான யாழினி,**

வெள்ளிக்கிழமை பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழாவிற்கு வந்திருந்தேன். பொதுவாக கோவில்களில் நடைபெறும் உற்சவங்களுக்கு நான் செல்வது குறைவு. அதற்காக நான் நாஸ்திகன் அல்ல. எதற்காகக் கோயில்கள் உள்ளன? அங்குள்ள பூசை முறைகள் எதற்காக உருவாக்கப்பட்டன? அங்கு செல்வோர் எப்படிச் செல்ல வேண்டும்? என்னென்ன உடை உடுத்த வேண்டுமென்றெல்லாம் சமயம் எமக்கு விரிவாக எடுத்துக்கூறுகிறது. இதன்படி எல்லாம் நடைபெறுகின்றனவா? முழுமையாகத்தான் நடைமுறைப்படுத்த வேண்டாம். சிறிதளவாவது

நடைபெறுகின்றதா. இல்லையே. மனஅமைதிக்காகவும், மனிதம் முழுமை பெற வழிவகுக்கவும் உருவான கோவில்களில் போட்டியும் பொறாமையும், சண்டைகளும் மலிந்துவிட்டன. பிரச்சினைகளை உருவாக்கும் பிரதான நிலையங்களாக இன்று கோயில்கள் விளங்குகின்றன. இதனால் தான் கோயில்களுக்கு நான் செல்வதில்லை. தேர்த்திருவிழாவில் அலங்காரப் பூஜிதையாக என்னவளைக் காணவேண்டுமென்ற ஆவலால்தான் அங்கு வந்தேன். தேரில் சுவாமி ஏறும் வரை நான் உம்மைக்காணவில்லை. பிள்ளையாருக்கு அருகிலிருந்து பூசை பார்த்துக் கொண்டிருப்பீா என்று நினைத்தேன். பக்தி முத்தி பரவசநிலையில் நீா இருப்பது எனக்குத் தெரியும்.

சனநெரிசலின் மத்தியில் வடக்கு வீதியில் தான் உம்மைக் காண நேர்ந்தது. வடக்கு வீதியிலே பிள்ளையார் தேரிலே பவனிவர தேரோடு நீ வந்தாய் தேராக. பட்டுப் போன்ற உன்தேகமதை பசுமையான பச்சைப்பட்டுச் சுற்றிற்று. என்கண்களுக்குள் கரைந்து நின்றமையால் பார்க்குமிடமெங்கும் பச்சையாகவே இருந்தது.

ஆடைதான் மனிதனுக்கு அழகைக் கொடுக்கிறது என்பார்கள். ஆனால் உம்மைப் பொறுத்தவரை ஆடைக்கு அழகை உமது உருவம் கொடுத்தது. எவ்வளவு பெண்கள் எத்தனை விதமாக உடுத்தி வந்த போதும் உம்மீதிருந்த எழில் வேறு யார் மீதும் இருக்கவில்லை. தேரின் பின்னால் அடி அழித்துக் கொண்டுவரும் பக்தர்கள் சாதாரண உடையுடுத்தி அடியை அழித்துவர விலைகூடிய சேலையணிந்த பக்தா்கள் எங்கே சேலை அழுக்குப் படிந்துவிடுமோ என்ற அச்சத்தால் நெஞ்சில் கைகூப்பியபடி வந்தனா். கோயிலுக்குச் செல்வது ஆசையை அழிப்பதற்கு. ஆனால் விதம்விதமான சேலைகளையும் விலையுயர்ந்த நகைகளையும் அணிந்து அழகுகாட்டவல்ல என்பதை எமது பெண்கள் எப்போதுதான் புரிந்து கொள்ளப் போகிறார்கள். அதைவிட உம்முடன் கதைத்துக் கொண்டுவந்த உமது சிநேகிதியின் உடையலங்காரம் மிகவும் அசிங்கமாக இருந்தது. வயிற்றின் பெரும் பகுதி மறைக்கப்படாமல் வெட்டவெளியாய் இருந்தது. காட்சிக்காக வைக்கப்படும் பொருளைப் போல் அல்லவா இருந்தது. இரண்டு கைகளின் மேல் புறத்திலும் முதுகுப்பக்கமும் தற்போதைய படக்கதாநாயகிகள் வைப்பது போன்ற ஜன்னல்கள் இருந்தன. எனக்கருகிலிருந்த இளைஞர்கள் சிலா் அந்த வெளிகளினூடாகத் தெரியும் தசைகளின் கவா்ச்சியைப் பற்றியே உரையாடிக்கொண்டிருந்தனா். அன்றைய தோற்றத்தை மட்டுமல்ல. அந்தப் பெண் இதற்கு முன்பு சென்ற இடங்களில் அணியப்பட்ட ஆடைகளைப் பற்றியெல்லாம் கதை கதையாகக் கதைத்தார்கள். கடவுளை வணங்க வந்த இடத்தில் கண்காட்சி நடத்தப்பட்டது போல இருந்தது. பெண்களின் உடல் முழுவதும் போதையை ஊட்டக்கூடியது. அதனால்தான் முன்னோர்கள் பெண்களின் உடைகளில் அதிக கவனம் செலுத்தினார்கள். அதற்காகத் தற்போதைய பெண்களைப் பற்றித் தரக்குறைவாக நான் கூறவில்லை. நீா பாவாடையுடனும், சட்டையுடனும் வரும்போது கணுக்கால் கூட தெரியவில்லை. அப்படி எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். அன்று நீா என்னைக் கண்டபின்பு உமது நண்பிகளிடமிருந்து விலகி தேருக்கு முன்னே சென்றீா. உமது அலங்காரத்தை நன்றாக நான் பார்த்தேன். தலைமுடியைப் பின்னி மல்லிகைச் சரம் சூடியிருந்தீா. மிகவும் பிரமாதமாக இருந்தது. ஆனால் கூந்தலின் இறுதியில் கட்டப்பட்ட பிளாஸ்ரிக் மல்லிகை மொட்டுத் தேவைதானா. அதையும் மல்லிகை மொட்டால்

அலங்கரித்திருக்கலாமே. வேறுஇடமானால் பரவாயில்லை. கோவில். அதன் புனிதத் தன்மையைக் காப்பாற்றுவது எமது பொறுப்பு. இதற்காகக் கோபிப்பீரா. அன்பே நித்தம் புதுவடிவில் நீ உலாவி வருவதால், என் சித்தம் கலங்குதடி. புத்தம் புது மலரின் பொலிவான பேரழகில் எக்கணமும் என்மனமதனில் நர்த்தனம் புரிகிறாய். உன்னைக் காணாமல் இருக்க முடிவதில்லை. அதனால் தான் பிள்ளையார் கோவில் தேருக்கு வந்தேன். உன் பேரழகைக் கண்டேன். அந்தப் பசுமையான தோற்றம் என்மனதைவிட்டு அகலாது.

**அன்புடன்**

**கரன்.**

# 21

**அன்பான கரன்,**

நீங்கள் என்ன நேர்முக வர்ணனையாளரா? அன்று திருமணவிழா ஒன்றிற்கு நான் வந்திருந்த கோலத்தை அப்படியே வர்ணித்திருந்தீர்கள். பல முறை வாசித்தும் என் ஆவல் அடங்கவில்லை. நிலக்கண்ணாடியில் அக்கோலத்துடன் பல முறை என்னை நானே பார்த்துக் கொண்டேன். பல முறை பார்த்தும் அவ்வர்ணனைகள் எதுகும் எனக்குப் பொருத்தமானதாகத் தெரியவில்லை. காதலின் உச்சக்கட்டம் வர்ணனை என்று எழுதியிருந்தீர்கள். அந்த உரிமையில் தலையிட நான் விரும்பவில்லை. எனினும் காதல் பித்துப்பிடித்துக் கண்டபடி பிதற்றுகிறீர்கள் போலத் தெரிகிறது. உங்கள் முழுமையான அன்பு தான் எனக்குத் தேவை. இன்று இருக்கும் அன்பு என்றும் என் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் குறைவடையக் கூடாது என்பது தான் எனது விருப்பம். என்வாழ்நாள் முழுவதும் என்மீது அன்பைக் குறைவில்லாமல் செலுத்துவீர்களா..?

காதலைப் பற்றியும் காதலர்களிடையே நிலவும் உறவுகளைப் பற்றியும் தவறான நோக்கத்தைத் தான் நான் கொண்டிருந்தேன். அது எனது தங்கையின் வாழ்க்கைப் பிர்ச்சினைகளால் தான். ஒரு முடிவு என்பது அவரவர்களுக்கு ஏற்படுகின்ற நன்மை தீமைகளைப் பொறுத்தது. இன்பமாக வாழ்பவன் வாழ்க்கை இன்பமானது என்று முடிவெடுப்பான். வாழ்க்கையில் துன்பதுயரங்களை சந்திப்பவன் வாழ்க்கைத் துயரமானது என்று முடிவெடுப்பான். தினமும் களவெடுப்பவன் எல்லோரையும் கள்வர் என்றே முடிவெடுப்பான். அது இயற்கை. அதை நிரந்தரமாக்குவதும் நிகழ்வுகள் தான். நான் கொடுமையானது என்று பல வருடங்களாக நினைத்திருந்த தங்கையின் காதல் விடயம் எவ்வளவு தீவிரமான அன்பினைக் கொண்டது. புனிதமானது, நிலைத்து நீடுழி வாழக்கூடியதென்பதை அவர்களின் சேர்க்கையிலிருந்து புரிந்து கொண்டேன். அவர்களுக்கிடையே இருக்கின்ற அன்பின் நெருக்கத்தை, புரிந்துணர்வைக்காண மெய்சிலிர்க்கிறது. காதலித்துத் திருமணம் செய்த பெற்றோர்களும் தம்பிள்ளைகள்

காதலிப்பதை வெறுக்கிறார்கள். எனது தங்கையின் கணவர் மிகவும் நல்லவர். ஒரு சிறுவிடயத்தைக்கூட முடிவெடுப்பதானால் தங்கையைத் தான் நாடுகிறார். தங்கை சில வேளைகளில் எரிந்து விழுகிறாள். ஏசுகிறாள். எனக்கென்றால் பயமாக இருக்கும். எங்கே வெறுத்து ஒதுக்கி விடுவாரோ என்று எண்ணுவேன். சில நிமிடங்களில் இருவரும் நான் இருப்பதையும் கவனியாது கதைத்துச் சிரித்துக் கட்டியணைத்து செய்யும் செயல்களைக் கண்ணாலே பார்க்க முடியாது. காதலுக்கு இவ்வளவு சக்தியா? எனது அம்மாவும் அப்பாவும் காதலித்துத் தான் திருமணம் செய்தார்கள் என்று எழுதியிருந்தேன். அவர்களுடைய வாழ்க்கையும் ஒரு எடுத்துக்காட்டாகவே இருந்தது. அளவில்லாத அன்பு, எதற்கும் விட்டுக் கொடுக்கும் தன்மை. கோபம் கொள்ளாது அமைதியாக முடிவெடுக்கும் தன்மை இப்படி எவ்வளவோ அவர்களிடம் இருந்தது. அது போல நீங்களும் என்னை அளவுக்கதிகமாக நேசிக்கிறீர்கள். எனக்காக எதையும் செய்யச் சித்தமாக இருக்கிறீர்கள். ஒரு முறை நீங்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் ஆண்கள் பெண்களின் அடிமையாக இருப்பது பற்றி எழுதியிருந்தீர்கள்.

அந்த வாசகங்களை எனது தங்கையின் வாழ்க்கையோடு இணைத்துப் பார்த்தேன். மிகவும் ஆழமான கருத்துக்கள். அவை எனது மைத்துனர் கட்டையில் கட்டப்பட்ட மாடானது அக்கட்டையைச் சுற்றி சுற்றி வருவதைக் போல் என் தங்கையை சுற்றி வருகிறார். அவள் சொல்வதை வேதவாக்காக ஏற்கிறார். எதையும் அவளுக்குச் சொல்லி விட்டே செய்கிறார். எனது திருமணவிசயம் பூராவும் எனது தங்கையின் திட்டப்படி தான் நடைபெறவுள்ளது.

கோவில் தேர்த்திருவிழாவிற்கு சாதாரணஒரு பச்சைச்சேலை தான் உடுத்தியிருந்தேன். கோயிலுக்குச் செல்வோர் சாதாரணமாகவே செல்ல வேண்டும். அதற்கேற்பத் தான் நான் வந்தேன் என்னிலுள்ள அன்பின் ஆழம் உங்களை ஆட்டிப் படைக்கிறது என்று நினைக்கிறேன். நான் எப்படி வந்தாலும் உங்களுக்கு அழகாகத்தான் இருக்கும். அந்தளவில் விசர் முற்றி இருக்கிறது. என்னைத்தான் பார்த்தீர்கள் பரவாயில்லை. என் அருகில் நின்ற பெண்ணை ஏன் பார்த்தீர்கள்? யாராவது அப்படியும் அலங்காரம் செய்யட்டும் முதுகில் யன்னல் அமைத்தாலென்ன, முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் பல கோண வெட்டு வெட்டட்டும் நீங்கள் ஏன் அதைப் பார்க்கிறீர்கள். நான் எப்படி எனது விருப்பப்படி அலங்காரம் செய்கின்றேனோ அதேபோல் அப்பெண்ணும் செய்கிறாள். உங்களுக்கென்ன?

ஆரம்பக் காதல் அடிக்கரும்பைப் போல் இனிக்கும். பாரம் ஏற ஏற நுனிக்கரும்பாகிவிடும். எனக்கும் வெளிநாட்டிற்குச் செல்ல விருப்பம். உங்களுக்கு விருப்பம் இல்லாவிட்டால் தெண்டிக்க மாட்டேன். என்னை மனமுவந்து ஏற்கும் நீங்கள், எனது வாழ்க்கைக்குத் தேவையானவற்றை அமைத்துத் தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இப்பொழுது உங்களைப் போல் நானும் அடிக்கடி கனவு காண்கிறேன். எனது தங்கை அடிக்கடி என்னைக் கேலி செய்கிறாள். நீங்கள் கண்ட கனவைவிட மோசமான கனவுகள் எல்லாம் தினமும் வருகின்றன. இப்பொழுது உங்களைக் காணாமல் என்னால் இருக்கமுடியவில்லை. உங்களுக்கு உறக்கத்தில் தான் கனவு வருகிறது. எனக்கு விழித்திருக்கும் வேளைகளில் கூடக்கனவு வருகிறது.

நேற்றுப் பகல் என்னை நீங்கள் கட்டித்தழுவுவதாக நினைவு. விடுங்கோ விடுங்கோ என்று முணுமுணுத்தேன். தங்கைக்கு அது கேட்டுவிட்டது. எனக்கு அருகில் வந்து வித்தியாசமாகப் பார்த்தாள். எனக்கு வெட்கமாகப் போய்விட்டது.

அவள் அனுபவப்பட்டவள் தானே. சிரித்து விட்டு அத்தானை வரச்சொல்லன் இவர் ஒன்றும் சொல்லமாட்டார். அத்தோடு நாங்கள் அதிகமாக வீட்டில் இருப்பதில்லை அத்தானை வரச்சொல்லு உனக்கும் பொழுது போகும். கலியாண வேலைகளை அவரக்கொண்டு செய்விக்கலாம். அதோடு சாத்திர சம்பிரதாயங்கள் சடங்குகள் நாள்நட்சத்திரமெல்லாம் காதலுக்கு இல்லை. அமாவாசையில் காதலர் கூடினாலும் அன்பாகத்தான் வாழ்பார்கள் என்றாள் எனக்கு வெட்கமாய் போய்விட்டது. நாளைக்கு எட்டுமணி போல் வரவும் காத்திருப்பேன்.

**உங்கள் அன்பான, யாழினி.**

# 22

**அன்பான யாழினி,**

உள்ளத்தில் உள்ளே உள்ளவற்றை உதடுகள் மூலமாகச் செல்ல வேண்டும். சிலவற்றை யாருக்கும் சொல்ல முடியாது வெட்கம் தடுத்துவிடும். ஆண்களாயினும் சரி பெண்களாயினும் சரி எத்தனையோ விடயங்களை நேரில் சொல்ல முடியாது தவிக்கிறார்கள். உதாரணமாக உம்முடைய அழகைப் பற்றி நேரில் என்னால் சொல்ல முடிவதில்லை. அதனால் தான் கடிதங்கள் மூலம் உமது அழகை ரசித்து சுவைத்து எழுதுகிறேன். அதே போல் என்னை நேரில் கண்ட போது வரும் படி கூறாமல் கடிதம் மூலம் வரும்படி எழுதியுள்ளீர். இப்படியான சந்தர்ப்பத்திற்காக நான் எவ்வளவு நாட்களாகக் காத்திருக்கிறேன் தெரியுமா..?

நாளைக் காலை எட்டு மணிக்கே கட்டாயம் வருவேன். இதுக்கு ஒரு காத்திருப்புத் தேவையா? கடிதம் வந்த நேரம் முதல் மனதில் ஒரே பரபரப்பு. எப்பொழுது விடியப்போகிறது என்ற நினைப்பு. இனிமையான நிகழ்வுக்காகக் காத்திருக்கும் போது நேரம் நகரமாட்டாது. ஒரு நிமிடம் ஒரு யுகத்தைப் போலல்லவா கழிகிறது. அந்தக் கடிதம் கிடைத்த பின்பு மனதில் எத்தனை விதமான கற்பனைகள். யாரும் இல்லாத வேளையில் இருவரும் முதன்முதலாகச் சந்திக்கப் போகிறோம். என்ன பேசுவோம் என்ற எண்ணம் என்மனதில் உருவாகவில்லை. மனதை உமது அழகான உருவம் அலைக்கழித்தமையால் எண்ணங்கள் வடிவம் பெறமுடியாது கலைந்தன. செயல்கள் தான் மனதில் உருவாகின. உமது அழகான கண்களைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். மொழுமொழுவென்று இருக்கின்ற கன்னங்களை ரசிக்க வேண்டும். உமது அழகான

கைவிரல்களைத் தொட்டுப்பார்க்க வேண்டும். கட்டியணைக்க வேண்டும். இப்படியெல்லாம் கற்பனை மனதில் ஊறிக்கொண்டிருந்தது.

தொட்டுப்பேச மனதில் ஆசையிருந்தும் உமது குணம் எனக்குத் தெரியும். காதல் என்பது வாலிப உணர்வு. காமத்தைத் தணிக்கும் வடிகால் என்றெல்லாம் முன்பு எழுதினீா். தற்செயலாக உம்மைத் தொட்டுவிட்டால் அதற்காகத்தான் காதலித்ததாகவும் நினைப்பீா். அதனால் தொட வேண்டும் வேண்டும் என்று எண்ணவே பயமாக இருக்கிறது. தனிமையில் சந்திக்க வேண்டும். ஆசை தீரக் கதைக்க வேண்டும் என்றெல்லாம் நான் முன்பு எண்ணியிருப்பேன். ஆனால் இப்பொழுது சந்தா்ப்பம் வந்த பின்பு தனிமையில் சந்திக்கப் பயமாக இருக்கிறது. எனக்குரியவள் நீா் என்றும் உமக்குரியவன் நானென்றும் நாமும் எம்மைச் சாா்ந்தவா்களும் தீா்மானித்த பின்பும் நெருங்கிப் பேசஎனக்குப் பயமாகவுள்ளது. காரணம் நீா் எப்படி நினைக்கிறீரோ தெரியவில்லை. காதலா்கள் சந்தித்தால் இருவரும் ஒருவருக்கேனும் வெறுப்பை உண்டாக்காத முறையில் சந்திப்பு நிகழ வேண்டும். திருமணமான பின்பு கூட புரிந்துணா்வு ஏற்பட்ட பின்புதான் உறவு ஏற்படல் வேண்டும்.

மதச் சடங்குகள் யாவும் முடிந்த பின்புதான் கணவன் தன்னைத் தொடவேண்டும் என்று நினைக்கும் பெண்கள் பலா் இருக்கிறாா்கள். உமது போக்கில் இருந்து நீரும் அப்படியான ஒரு பெண்ணாகத்தான் இருப்பீா் என்று நினைக்கிறேன். எனினும் எனது கனவில் நித்தம் வந்து தொல்லை தருகிறீா்கள். நேற்றிரவு வந்தவிதம் பற்றிக் கூறுகிறேன். துயிலிலே வந்து, துன்பத்தைத் தந்து துயிலினைக் கலைத்து, தூக்கத்தைக் கெடுத்து, அங்கங்களின் அழகை மெல்லக் காட்டி இன்புறும் வேளை மெல்ல மறைவது நித்தம் நடக்குது.

இதனால் மனம் வாடுகிறது. நினைவுகள் நெருப்பாகச் சுடுகின்றன. இந்த வேளையில் தான் என்னை வரும்படி அதுகும் தனிமையில் இருக்கும் போது வரும்படி எழுதியிருக்கிறீா். ஏராளமான கற்பனைகளைச் சுமந்து கொண்டு வருகிறேன். மனதில் பயமிருந்த போதும் அசட்டுத் துணிவும் உள்ளது. தற்செயலாக அணைத்து முத்தமிட்டால் என்ன செய்வீா்? கோபிப்பீரா..? அல்லது ஏசிக்கலைப்பீரா? என்ன இருந்தாலும் உமது மனதுள்ளும் பரவசமான உணா்வுகள் இருக்கத்தானே செய்யும். ஒரு முறை சொன்னீா், நானென்ன உணா்வுகளில்லாத மரமா என்று. காதலா்கள் நெருங்கியிருக்கும் போது உலகம் இருண்டிருக்கும். அயலில் நடப்பவை எதுவும் தெரியாது. இது எப்படி எனக்குத் தெரியும் என்கிறீரா? நான் பகலில் உமது நினைவுகளில் இருக்கும் போது வீட்டிலோ ஆபிசிலோ நடப்பவை எதுவும் எனக்குத் தெரிவதில்லை. உலகம் சுத்தமில்லாத சூனியப்பிரதேசமாகவே இருக்கும். ஏதோ பலா் உலாவுவாா்கள். பலா் எதை எதையோவெல்லாம் கேட்பாா்கள். இவையொன்றும் எனக்குத் தெரியாது. கேட்காது. உமது நினைவுகளே இவ்வளவு சுகத்தைத் தந்தால், நீா் அருகில் இருந்தால் எப்படியிருக்கும். காதலா்கள் அருகில் இருந்தால் தன்வசம் இழப்பது இயல்பு. அதனால் சில சமயம் விபரீதமான நிகழ்வுகளும் நிகழலாம். எனவே யாவற்றையும் முன்கூட்டியே அறிந்துவிட்டு வருவது நல்லதெனப்படுகிறது. அதனால்தான் இவற்றையெல்லாம் எழுதினேன். மனதில் பயமிருந்த போதும்

எது நடந்தாலும் என்மீது கோபப்படமாட்டீர் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அந்த நம்பிக்கையுடன்தான் வருகிறேன்.

**அன்புடன்,**

**கரன்.**

# 23

**அன்பான யாழினி,**

எந்நேரமும் என் மனதில் தேயாத நிலவாய் நீ உலாவுவதால் எந்தத் துன்பமயமான வேளைகளிலும் மழைக்கால கருமுகில்கள் தோன்றி உன் அழகிய முகத்தை மறைத்ததில்லை. நீர் வரச்சொல்லி எழுதிய கடிதங்கண்ட பின் எவ்வளவு கற்பனைகள், எவ்வளவு திட்டங்கள் மனதில் எழுந்தன. தெரியுமா? காலையில் இரண்டு தரம் லக்ஸ் போட்டுக் குளித்தேன். அழகான சுத்தமான ஆடைகளை அணிந்தேன். காலையில் தேநீர் கூடக்குடியாது எழுந்தவுடன் அலங்காரம் செய்து புறப்பட்டேன். வழியில் வரும் போதுகூட எத்தனை கற்பனைகள். உமது வீட்டுப் படலையைத் திறந்தவுடன் உமது நாய்கள் இரண்டும் என்னைப் பாய்ந்து கௌவவந்தன. அவற்றின் குரைப்பைப் பார்த்ததும் எனக்கு நீர் முன்பு எழுதிய கடிதவாக்கியங்கள் தான் நினைவிற்கு வந்தன. முன்பு கோபத்தோடு எழுதிய கடிதங்கள் மூலம் உம்மைக் கடைசி வரையும் நெருங்கவே முடியாதென்று தான் நினைத்திருந்தேன். ஆனால் பின் நீர் என்னைக் கண்டதும் உருகிய விதம் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அதே போல் தான் நாயும் மாறும் என்று நினைத்தேன். நாயின் குரைப்புச் சத்தம் கேட்டு நீர் வெளியே வந்தீர். முதல் முறை நான் வீட்டிற்கு வந்த போது என்னை நீர் எதிர்பார்க்காததால் சாதாரணமான நிலையில் இருந்தீர். அந்தக் கோலம் தான் எனக்குப் பிடித்தது. அலங்கரிக்கப்படாத அழகு கட்டுப்பாடு இல்லாத பகுதிகளின் அசைவு, வீடு கழுவியதால் போலும் ஈர உடை, அதனூடாக லேசாய் தெரிந்த எழிலான பகுதி என்னை அசத்தியது. நேற்று நன்கு திட்டமிட்டு அலங்கரிக்கப்பட்ட தோற்றம் அழகாயிருந்தபோதும் அசத்தவில்லை.

வீட்டில் யாருமில்லை என்ற நினைவில் கற்பனைக் கோட்டைகளோடு வந்த என்னை வீட்டில் இருந்த ஒருவரை அடுத்த வீட்டுத் தாத்தா என்று கூறி அறிமுகப்படுத்திய போதே எனது கற்பனைகள் யாவும் சிதறிவிட்டன. வெகுநேரம் அசையாமல் இருந்து அறுத்துக் கொண்டிருந்த கிழவனைக் கொல்ல வேண்டும் போல் இருந்தது. ஓயாமல் கேள்விகள் கேட்டுக் கொண்டேயிருந்தார். காதும் கேளாது ஒரு கேள்விக்குப் பத்து முறை மறுமொழி கூறவேண்டியிருந்து. நீர் பக்கத்தில் வந்திருந்து கதைத்த போதும் அவருமல்லவா சேர்ந்து கதைத்தார்.

அதன்பின் நீர் உள்ளே சென்ற போது நானும் உம்முடன் உள்ளேவர எழுந்த போது இரு தம்பி பிள்ளை தேநீர் ஊற்றப்போகுது போல கிடக்கு. நாங்கள் கதைப்பம் என்றார். எனக்குச்

சரியான ஆத்திரம் வந்தது. ஆனால் காட்டிக்கொள்ள முடியவில்லை. நான் வேலை செய்யவென்றுதான் வந்தனான். ஏதாவது வேலையிருந்தால் சொல்லும் என்று நான் கேட்க ஐயையோ நீங்கள் வேலை செய்ய வேண்டாம். எல்லாம் கூலிக்கு ஆள்பிடித்து நாங்கள் செய்துவிட்டோம். தங்கை விளையாட்டாகச் சொன்னதை நான் எழுதினேன் அவ்வளவுதான் வீட்டுக்கு மாப்பிள்ளையாக வருமுன்பே உங்களைக் கொண்டு வேலை செய்விக்கலாமா..? யாரும் அறிந்தால் என்ன நினைப்பார்கள் என்று அழகாகச் சிரித்தீர் எவ்வளவு அழகான சிரிப்பு அது. அந்தச் சிரிப்பால் உடல் சிலிர்த்தது. பின் தேநீர் கொண்டு வந்து தந்தீர். தேநீர் அவ்வளவு சுவையாக இருக்கவில்லை. சாயமும் சீனியும் கூடுதலாக இருந்தது. நித்தம் உண்ண வேண்டிய உணவின் முதல்படி அன்று என்னைக் கண்டபதற்றத்துடனும் கற்பனைகளோடும் இருந்த உம்மால் சரியாக இயங்கமுடியாததால் தான் தேநீர் சுவையாகத் தயாரிக்க முடியவில்லை. பெண்கள் கணவர்களைக் கவரவேண்டுமானால் சுவையாகச் சமைக்க வேண்டும். குடும்பத்தின் ஆரோக்கியமும், மகிழ்வும் பெண்களின் சமையலில் தான் தங்கியுள்ளது.

தமிழரின் பண்பாட்டில் முக்கிய இடம் வகிப்பது உணவு முறையும் உணவுப் பழக்கவழக்கமும் தான். நம்முன்னோர் உணவின் மூலம் தமது பாரம்பரியங்களையும், குலப்பெருமையையும் குடும்ப அன்னியோன்னியத்தையும் குடும்பப் பாசத்தையும் வலியுறுத்தியுள்ளனர். வெளியே சென்ற கணவனுக்காகத் தாமுண்ணாது காத்திருக்கும் எம்குலப் பெண்களை எம்மவரே இகழ்வதுண்டு. ஆண்கள் பொதுவாகப் பொறுப்பற்றவர்கள், பணத்தைத் தேவையில்லாமல் செலவு செய்பவர்கள், குடும்பப் பாரத்தை உணராதவர்கள். இவற்றை உணர்த்தத்தான் பெண்கள் ஆண்களின் வருகைக்காகக் காத்திருக்கின்றனர். தனக்காக உண்ணாமல் ஒரு பெண் காத்திருப்பாள் என்ற நினைவு குடும்பத் தலைவனுக்கு எப்பொழுதும் வராது. அதை வரப்பண்ணுவதே அதன் நோக்கம். எனக்கு விசர்வந்தால் இப்படியெல்லாம் எழுதுவேன் கதைப்பேன். அதை நீர் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

எவ்வளவு நேரம் தான் உம்மோடு கதைப்பதற்காகக் காத்திருப்பது. கிழவன் அசையாததால் நான் போவதற்கு எழுந்தேன். மத்தியானம் சாப்பிட்டுவிட்டுப் போங்கோ என்றீர். நீர் சமைக்க நான் என்ன செய்வது வெளியே சென்றுவிட்டு வருகிறேன் என்று கூறிவிட்டுக் கிளம்பினேன். மூன்று மணித்தியாலங்கள் கழித்து நான் வந்த போதும் கிழவன் அங்கேயே இருந்தது எனக்கு ஆத்திரமாக இருந்தது. என்ன செய்வது என்னுடைய விதி அது என்று நினைத்தாவது வந்தேன். மத்தியானச் சாப்பாடு நன்றாக இருந்தது எனினும் அனுபவம் குறைவு என்று நினைக்கிறேன். அம்மாவும் இறந்துவிட்டார். சகோதரியிடமாவது சமையலைக் கேட்டுப் பழகவும். நான் ஒரு சாப்பாட்டுப் பிரியன். அம்மா எனக்கு விதம் விதமாகச் சாப்பாடு செய்து தந்து பழக்கிவிட்டா. திருமணம் முடிந்தபின் அம்மாவிடம் கேட்டுப் பழகலாம்.

சாப்பிட்ட பின்பும் உம்மைவிட்டுப் பிரிய மனமில்லை. இருந்தும் நீர் ஏதாவது நினைப்பீர் என்று புறப்பட்டேன். உள்ளுக்கு வந்து வீட்டைப் பாருங்கோவன் என்றீர் எனது மனம் குளிர்ந்தது. உமது அறை மிகவும் அழகாக இருந்தது. பொம்மைகளும் படங்களும் என்னைக் கவர்ந்தன. மேசையில் இருந்த நாய்ப் பொம்மை மிகவும் அழகாக இருந்தது. எடுத்துப் பார்த்தேன். உங்களுக்குப்

பிடித்ததா? என்று கேட்டபடி அருகில் வந்தீர். உமது பாவாடை என்மீது லேசாக உரசிப்பரவசத்தை உண்டு பண்ணியது. உம்மைப் பார்த்தேன். சிரித்தபடி தலைகுனிந்தீர். பின் இதைப்பாருங்கோ என்று ஓர் ஓவியத்தைத் தந்தீர். யார் வரைந்தது நீரா? எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு அழகாக வரையத் தெரியுமா உமக்கு என்று கேட்டவாறு ஓவியத்தை பெற கையை நீட்டும் போது ஓவியத்துடன் உமது கையையும் பிடித்தேன். நீர் விலக்கவில்லை. எனினும் தற்செயலாக நடந்ததைப் போல் விட்டுவிட்டேன். அந்த நினைவு பசுமையாகவுள்ளது.

**அன்புடன், கரன்.**

# 24

**அன்பான யாழினி,**

உமக்கோர் இனிப்பான செய்தி. அப்பாவும் அம்மாவும், எனது திருமணத்திற்குச் சம்மதித்துவிட்டார்கள். நான் ஏற்கனவே தாடிவளர்த்துச் சோகமாய் உலாவுவதைப் பார்த்த அம்மா, அப்பாவிடம் சொல்லியிருக்கிறா. அப்பா என்னுடைய அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவரை விசாரித்திருக்கிறார். அவர் தனக்கெதுவும் தெரியாதென்று சொல்ல அவர் எனது நண்பனான அசோக்கை விசாரித்து இருக்கிறார். அசோக் தனக்குத் தெரிந்தவற்றைக் கூறிவிட்டு ஜனனியை அழைத்து வந்து கதைக்கும்படி கூறியிருக்கிறான். ஜனனி எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறாள். அப்பா அந்த விசயங்களை அம்மாவிடம் கூறியிருக்கிறார். பின் ஜனனியுடன் வந்து உம்மை அலுவலகத்தில் பெண்பார்த்திருக்கிறார். அவருக்கும் உம்மை பிடித்துவிட்டது. அதனால் வீட்டில் ஓகே சொல்லிவிட்டார்கள். இனி கல்யாணம் தான். அனேகமாக இதுதான் நான் உமக்கு எழுதும் இறுதிக்கடிதமாக இருக்கும். இவ்வளவு காலமும் கடிதம் மூலம் உரையாடி இன்பத்தை அனுபவித்தோம். இனிக்கட்டில் மூலம்... ஒவ்வொரு கடிதத்திலும் பெண்பார்க்க வீட்டாரை அனுப்பும்படி கேட்டு எழுதுவீர். எனது பெற்றோர் உம்மைப் பார்க்க பதினெட்டாம் திகதி திங்கட்கிழமை உமது வீட்டுக்கு வருவார்கள். அவர்களை நன்றாக உபசரித்து ஐஸ் வைத்து அனுப்பவும். சீதனம் எதுவும் அவர்களிடம் இல்லை. கேட்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். அவர்கள் கேட்கமாட்டார்கள். சீதனமில்லாமல் சீர்திருத்தக் கல்யாணம் செய்யத்தான் எனக்கு விருப்பம். என்னாலும் உம்மைப் பிரிந்து இருக்க முடியவில்லை. அன்று உம்மை வந்து பார்த்தது முதல் என்மனம் அலைபாய்கிறது.

எப்படியோ இருந்த நாம் இன்னும் சில தினங்களில் ஒன்றாகப் போகிறோம். இருவருடைய இன்பதுன்பங்களெல்லாம் இனி ஒன்றாகவே இருக்கும். எத்தனையோ இலக்கியங்களில் இல்லற இன்பத்தைப் பற்றி சுவைபட எழுதியதை வாசித்திருக்கிறேன். இனி அது எப்படி இருக்கும் என்று அனுபவிக்கப் போகிறேன். வாழ்வில் எத்தனையோ பேர் காதலிக்கிறார்கள். எல்லோரும் ஒன்று சேர்ந்ததில்லை. நாம் ஒன்று சேர்கிறோம். எமது திருமணத்தை மிகவும் விமரிசையாக நடத்த வேண்டுமென்று அம்மா விரும்புகிறா. எமது வீட்டில் நடைபெறும் முதல் மங்கள வைபவம் அது. எனவே பெரிதாகக் கொண்டாட விரும்புகிறார்கள். உமக்கு ஏதாவது ஆட்சேபனை இருக்கா.

நீர்தானே வீட்டின் குடும்பத் தலைவி. சகல பொறுப்புக்களும் உம்மைத் தானே சார்ந்தது. உமது திருமணத்திற்கு நீரே ஆயத்தம் செய்ய வேண்டிய நிலையில் இருப்பதை எண்ண எனக்குக் கவலையாகவுள்ளது. எனது இனத்தவர் ஒருவருக்கு அண்மையில் திருமணம் நிச்சயிக்கப்பட்டபின் அவரது பாட்டனார் இறந்துவிட்டார். எனவே பெண்ணின் வீட்டிற்கு முதல் நாளே மாப்பிள்ளை சென்றுவிட்டார். பெண்ணின் வீட்டின் ஓர் அறை மாப்பிள்ளை வீடானது. அப்படி முதல் நாளே நீர் எமது வீட்டுக்கு வந்துவிட்டால் எமது வீட்டின் ஓர் அறையைப் பெண் வீடாகப் பாவிக்கலாம். மனங்கள் இணைந்து சங்கமித்த பின் சடங்குகள், முறைகள் யாவும் சம்பிரதாயம்தானே. சடங்குகள் கிரியைகள் மனச்சாந்திக்காகச் செய்யப்படுபவையே தவிர நிபந்தனைகள் அல்ல. இது அவரவரின் மனவியல்பைப் பொறுத்தது. உமது விருப்பத்தில் குறுக்கிட நான் விரும்பவில்லை. விரும்பவும் மாட்டேன். திருமணமான பின்பும் இந்நிலை தொடரும். பொதுவாக ஆண்கள் பெண்களை அடிமைகளாகவும், போதைப்பொருளாகவும் தான் நினைக்கிறார்கள் என்று எழுதியிருந்தீர். பத்திரிகைகளும் அப்படித்தான் சொல்கின்றன. ஆனால் என் வாழ்க்கையில் எத்தனையோ குடும்பங்களைப் பார்த்திருக்கின்றேன். பெண்கள் தான் அங்கெல்லாம் மேலோங்கியுள்ளார்கள். அதிகமான குடும்பங்களில் முக்கியமான முடிவுகளை எடுப்பதே பெண்கள்தான். பல ஆண்கள் திருமணமாகுமுன் வீராப்புடன் பேசுவார்கள். ஆனால் திருமணம் முடிந்தபின் பெண்களின்(மனைவிமாரின்) கொத்தடிமைகளாக இருக்கிறார்கள். என்னுடைய நண்பன் ஒருவனின் வாழ்க்கை எனக்கு முன்னுதாரணமாக இருக்கிறது. அடிமைத்தனம் என்பதை கேவலமாக நான் கருதவில்லை. அடிமைத்தனம் என்பது அளவிடமுடியாத அன்பாலும் ஏற்படும். சில வேளைகளில் புத்திசாலித்தனத்தாலும் ஏற்படும். இதில் உமக்குப் பொருத்தமானது எதுவோ அதை ஏற்கவும். அல்லது புதுவிளக்கம் இருப்பினும் தெரியப்படுத்தவும். திங்கட்கிழமை எனது பெற்றோர் உமது வீட்டுக்கு வருவதை முறைப்படி மாமா மூலம் அறிவிப்பார்கள். அதற்குமுன் அவசரப்படும் உமக்கு ஆறுதல் அளிப்பதற்காக இதை எழுதியுள்ளேன். இப்பொழுதே எனது மனதில் திருமணக்கனவுகள் வருகின்றன. எப்படியெல்லாம் நடக்க வேண்டுமென்ற கற்பனையில் மூழ்கியுள்ளேன்.

பெற்றோர் சம்மதித்தபின் எனது கற்பனை உறைந்து அடைபட்டுவிட்டது. தேவதையாகத் தெரிந்த நீர் குடும்பத் தலைவியாக, பாரத்தைச் சுமக்கும் குடும்பப் பெண்ணாகத் தெரிகிறீர். திருமணமானபின் எப்படித் தெரிவீரோ தெரியாது. மணமேடையில் மலர் மஞ்சத்தில் சந்திக்கும் வரை காத்திருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். கனவுகளுடன் காத்திருக்கவும்.

**அன்பான ,**

**கரன்.**